ஓம்

ஸ்ரீ ஜிநாய நம:

பல ஜின தாசர்களால் பாடப்பெற்ற

திரு. நருங்குன்றம் அப்பாண்டை நாதர்

# தோத்திரத் திரட்டு

இஃது

காஞ்சிபுரம், சில சிராவக அன்பர்களால் வெளியிடப்பெற்ற
திரு. நருங்குன்றம் அப்பாண்டை நாதர் தோத்திரத்
திரட்டிலுள்ள பதிகங்களும்,

திரு. மேல்மின்னல்-சக்கரவர்த்தி நயினர் அவர்கள்

பல பழைய ஏட்டுப் பிரதிகளினின்றும் திரட்டி
ஆராய்ந்து எழுதிவைத்திருந்த பதிகங்களும் சேர்ந்தது.

93:4172
N56

பிரசுரித்தவர்:

ஜைன கிரந்த நிலையம்

1/14, தையப்ப முதலி தெரு,

சென்னை-1.

முதற் பதிப்பு—ஜனவரி 1956

விலை அணா 12.

ராயன் பிரஸ், சென்னை-1.

ஸ்ரீ

# பதிப்புரை

தோத்திரத்திரட்டு என்னும் இந்நூல், காஞ்சிபுரம் திருவாளர்களான நூல்மளிகை. தி. பா. புஷ்பநாத நயினர், நூல்மளிகை தி. அ. அனந்தநாத நயினர், பட்டு மளிகை கூ. ம. சிந்தாமணி நயினர், ஜவுளி வியாபாரம். ந. ச. சின்னசாமி நயினர் முதலிய அன்பர்களுடைய முயற்சியால், காஞ்சிபுரத்திலுள்ள சில சிராவகர்களின் பொருளுதவிகொண்டு நாற்பத்து நான்கு ஆண்டுகட்கு முன்னர் (கி. பி. 1912) அச்சிடப் பெற்று வெளி வந்தது. அப்போது அச்சிடுவதற்கு அவர்களுக்கு ஒரே ஏட்டுப் பிரதி கிடைத்தமையால், பல பதிகங்கள் ஏடெழுதுவோரால் உண்டான பிழைகளைத் திருத்தாமலேயே பிரதியிலுள்ளவாறே அச்சிட்டு வெளியாக்கி யுள்ளனர். மேலும் இந்நூல் வெளிவந்து ஏறக்குறைய அரை நூற்றூண்டாயினமையால், படிப்போர்க்குக் கிடைப்பதும் அரிதாயிற்று. அதனல் யாம், இந்நூலைக் கூடிய வரையில் பிழையின்றி அச்சிடவும், இதுவரையில் அச்சில் வெளி வாராமல், திரு. மேல்மின்னல்-சக்கரவர்த்தி நயினர் அவர்கள் ஆராய்ந்து எழுதி வைத்திருந்த பல பதிகங்களை இந்நூலுடன் சேர்த்துப் பதிப்பிக்கவும் விரும்பி இம்முயற்சியில் இறங்கினேம்.

இதுபோன்று பல்லாண்டுகள் பதிப்புக்கு வாராமலுள்ள ஜைன நூல்களை அச்சிட்டு வெளியிட வேண்டு மென்ற அவாக் கொண்டு, **ஜைன கிரந்த நிலையம்** என்ற ஒரு புத்தகப் பிரசுராலயத்தைச் சென்னையில் நிறுவியுள்ளோம். இந்த நிலையத்தில் தொடர்ந்து பல ஜைன நூல்கள் வெளிவரும். ஆதலால் ஜைன பிரதேசங்களிலேயுள்ள அன்பர்கள், அரிதாகக் கிடைக்கும் ஏட்டுப்பிரதிகளை எமக்கு அனுப்பினல், அவைகளைப் புலவர்களைக் கொண்டு ஆராய்ந்து சுத்தப் பிரதியாக வெளியிட முயற்சிப்போம்.

இந்நூலிலும், சில பதிகங்களில் பொருள் விளங்காத சொற்களும், எழுத்துக்களும் உள்ளன. அவற்றின் உண்மை வடிவத்தை மற்றொரு பிரதி கொண்டு ஆராய்ந்து தெளிய வேண்டுமேயன்றி

மனம்போன போக்குப்படி பொருள்கொண்டு திருத்துவது உசித மாகாதெனக் கருதி அங்ஙனமே பதிப்பித்துள்ளோம். இப்பதிப் பைக் காணும் அறிஞர்கள், இதுபோன்ற வேறு பிரதிகள் தங்க ளிடமிருந்து எமக்கு அனுப்பினுல், அடுத்த பதிப்பில் மேலும் பிழையின்றி வெளியிட அனுகூலமாயிருக்கும்.

இத் தோத்திரத்திரட்டு, ஸ்ரீ ஜின பகவானைத் தமிழில் உருக்க மாகத் தோத்திரிப்பதற்கு மிகவும் உபயோகமுள்ளதாயிருக்கின் றமையால், ஒவ்வொரு சிராவக சிராவகிகளும் இதனை வாங்கி, வாசித்து எமது முதற்பணியை ஆதரிக்கக் கோருகிறோம்.

ஜைன கிரந்த நிலையம்
சென்னை-1.
20—1—1956.

இங்ஙனம்:

**பதிப்பாளர்**

ஸ்ரீ

## ஸ்ரீஜிநாயநம:

வெண்பா.

பக்தஜின தாசர் பகர்ந்தபல தோத்திரத்தை
நித்தம் துதிசெய்வார் நீணிலத்தில்—முத்தன்
முளரியோ நல்லாசான் முன்வாத்தி சாது
வளவருளின் வாழ்வர் மகிழ்ந்து.

## திருநறுங்கொண்டை மலையின்பேரில் பதிகம்.

---

குளிர்கொள்செம்பிண்டிமலர் மழைமுழங்குந்துவனி குடைசெழுந்துந்துமிகுலா, வொளிவிளங்குங்கவரி யளியிலங்கும்பொனெயிலடையவன்றங்குசயில, மளிகுலங்கொண்டுமணி மலர்களுஞ்சந்தனமு மகிலுமுன்சிந்தவருகிற், றெளிநலங்கொண்டருவி களுவலங்கொண்டொழுகு திருநறுங்கொண்டைமலையே. 1

உலகடங்குஞ்சமவ சரணவெண்புண்டரிக சரணவுன்றன்சரணமுன், றலகிலங்குந்திகிரி யவனுநன்கிந்திரனு மடிவணங்கும்பரனிட, மலர்கமழ்ந்தங்கணிறை மழைநிறங்கொண்டகடல் வலையமென்கின்றவர்வெண், டிலகுமுன்கொண்டகொடி செழுநறுங்கொண்டைபுரை திருநறுங்கொண்டைமலையே. 2

முனைவருங்கந்தியரு முரகருப்வியந்தரரு முதலிரண்டென்கணியையோ, ரனைவரும்பெண்களுயர்நரர்விலங்குஞ் சுழலுமணிகொணஞ்செய்பவனிடம், வினைசெயுந்திண்குறவர்ஞிமிறருந்தும்பிரசவிடுவதங்கொண்டுவினைசெந், தினையுமெண்பிண்டிசுனை யுகுநெய்கொண்டுண்டுபுகழ் திருநறுங்கொண்டைமலையே. 3

பிறர்வருந்தும்பொய்கொலை களவுநண்பெண்கணசை பொருள்தினந்தின்றபிரசம், நறவருங்கங்கி லுணலறவநண்பின்றிடைவநவையுஞ்சென்றவனிடங், குறவருஞ்சிங்கமுதல் கொடுவிலங்கும்பலகொலைதவிர்ந்தங்கண்மரபிற், சிறகர்வண்டும்பிரச நுகரவஞ்சும்பெரிய திருநறுங்கொண்டைமலையே. 4

குவிகைகொண்டிந்திரநர பதிகடம்பெண்க ளொடு குருகவெம் பந்தவினைவென், றவிகைகொண்டடம்பொனெயி லதனிளெண் பிண்டிநிழ லமருநஞ்சம்பவனிடங், கவிகையங்தொங்கனிரை கவரிமுந்துங்கொடிக ளனகர்தம்பஞ்சதரளச், சிவிகையன்புந்திதிரு விழவோடெங்கெங்குமிகு திருநறுங்கொண்டைமலையே. 5

குடைகளொன்றொன்றின்மிசை கலைவருண்டெங்குமிகு குமுகுமென்பிண்டிநிழலிற், படைகளொன்றின்றியிரு வினையெனும் பண்டைமுது பகைபுறங்கண்டவனிடம், மிடரழுங்கும்பரிசு சுடர் விளங்குங்கனக மெனவருந்துந்திருவுளத், திடதவங்கொண்டுசெறி பவர்கடஞ்சங்கம்வளர் திருநறுங்கொண்டைமலையே. 6

வனசபீடத்துறையு மணிபதித்தப்பிரபையு மன்குடைப் பைங்குயில்களா, புனையுமென்பிண்டிநிழ லதனினின்றன்புபுரி புனித னம்பொற்சயிலமாம், பனகநஞ்சின்கொடுமை நிருதர்சங்கந்துழசை படைகொடுந்துங்கவிரல்வேள், தினகரன்பைம்புரவி யிரதமண்டும் பெரிய திருநறுங்கொண்டைமலையே. 7

மகரமுன்கொண்டகொடி மதனன்னபைந்தனுனை மடியவன் வந்தசயிலங், தகரவைந்தின்கிரியை சரியவன்றன்றுலகுச் சகலமுங் கண்டவனிடம், மகருவுஞ்சந்தனமுமணிநெடுசண்பகமுமவைகளுந் துன்றுசிமையச், சிகரமெங்குங்குமரி யறியவன்கொண்டபுகழ் திருநறுங்கொண்டைமலையே. 8

தனகனங்கொண்டுதள ரிடையிளம்பெண்டிரொடு சபைவடங் திண்படையிலா, வனகவெண்பந்தவினை யறவெறிந்தின்பமுற வமுதியம்புஞ்ஜினனிடங், கனகமுந்துங்கநவ மணிகளுங்கண்கள் கவங் கதிர்பரந்தும்பரவருந், தினகரன்பைம்புரவி பலநிலங்கொண்டுபெயர் திருநறுங்கொண்டைமலையே. 9

கறுவொடுங்கன்றியெரி கனல்சொரிந்தஞ்சவரு கமடன்வஞ்சத் திருவுளத், தறிவதொன்றின்றியுல கடையவங்தெண்பொருளு மறியவன்றங்குசைலம், நறியசந்துந்துநவமணிகள் சிந்துங்கெடில நதியில் முன்சென்றுமுதுநேற், செறிவில்வந்திந்துநிகர் சினையிளஞ்சங்கம் வளர் திருநறுங்கொண்டைமலையே. 10

நசைதவர்ந்தைம்புலனு நலியினின்பஞ்சகதி நணுகலென்றுந் தவிர்கிலீ, ரசைதருந்துனபகதி யடைதரென்றுந்தெரிய வருளுநஞ்

சம்பவனிடம், இசைதருந்தந்திரியி னெதிர்முரன்றங்கனைக ரிலையம் வந்தென்றவிமையோர், திசைதொறுஞ்சென்றுமலர் கொடுவலங் கொண்டொழுகு திருநறுங்கொண்டைமலையே 11

முற்றும்.

ஸ்ரீ

ஸ்ரீஜிநாயநம:

# திருநறுங்கொண்டை அப்பாண்டை நாதர் பேரில் அப்பர் பாடிய பதிகம்.

---

வந்துவந்துபிறந்துழலா மனையுமில்லை மற்றுமினிமுலையருந்தா மாந்தரில்லை, சந்ததமுமிப்படியேநாயேனிந்தச் சாகரத்திலேமூழ்கித் தயங்கலாமோ, எந்தையேமுக்குடைக்கீழாதிநாதா யினியமையும் பிறப்பொழித்திடேற்றவேண்டும், நந்துலவும்நறுங்கொண்டையருகாவுன்னை நம்பினேனின்பதத்தை நல்குவாயே. 1

கற்றறியேன்கற்றவர்தாள்கழறேனுந்தன் கழலிணைகள்கண்டுகளிகூர்ந்தநாளுஞ், சுற்றறியேன்ஜினாலயத்தைப்பொல்லாப்பாவி சொற்கிரங்கிநின்செவிக்கேதோற்றகண்பா, ருற்றதுணையுன்னடிக்கேயறன்ருன்வீர வோங்குதன்மதேவதையுமுயருமூதூர், நற்றமிழ்சேர் நறுங்கொண்டையருகா வுன்னை நம்பினேனின்பதத்தை நல்குவாயே 2

அன்னையுதரந்தனிலேபத்துமாத மவதரித்துக் குழவியதாயாளதாகி, பின்னைமனைபணங்கள்சுவீடுமாடும் பெண்டிருமக்களும்வருத்தப்பேயனுகி, யென்னையெமன்வந்துபிடித்திழுக்குங்காலை யென்செய்வேனெண்குணவெண்சிறப்புளானே, நன்னெறிசேர்நறுங்கொண்டையருகாவுன்னை நம்பினேனின்பதத்தை நல்குவாயே. 3

குலங்களெவராகினுமேயவர்பாற்சென்று குறைசொல்லியிச்சை சொல்லிக்கரமுங்கூப்பி கலங்கிமனந்தள்ளாடித்திரிவேன்றன்னை கருத்திலுனேயே நினேக்கக்கிருபைபாராய், துலங்கியமுக்குடைச்செல்வாஜோதியெந்தன் றுணேயேயென்கண்மணியே துயர்தீரப்பா, நலங்கசூறுநறுங்கொண் டையருகாவுன்னே நம்பினே னின்பதத்தை நல்குவாயே. 4

கோட்டுமுலேமடமாதர்மாய்கையாலே கொண்டமயல்மிண்டெழவே கொஞ்சமாகிக், கேட்டவர்களிகழ்ந்திடவேபொல்லோன் செய்யுங் கிலேசமெனும்பவந்துலேயகிருபைகண்பாராய், நீட்டியறங்காத்தவனும்வாழுந்தன்மதேவதையுந்தேவர்களும் ஜெயஜெயென்ன, நாட்டியசீர் நறுங்கொண்டையருகாவுன்னே நம்பினேனின்பதத்தை நல்குவாயே. 5

மானனேயவிழிகாட்டி முகத்தைக்காட்டி வண்கலசமுலேகாட்டி மாலேபூட்டுந், தேனனேயமொழிமடவாரல்குற்பாம்புதீண்டிவிடமேறி மிகத்தயங்கலாமோ, ஒநமோநமோரகந்தாணமென்றே யுச்சரித்தேவுன்னடிப்பாலுறவேவேண்டும்,நானிலமென்னறுங்கொண்டையருகாவுன்னே நம்பினேனின்பதத்தை நல்குவாயே. 6

அயன்சலித்தானெழுதமுடியாதர்ஞகி அன்னேயரும்வயறிளேத்தாரடியேன்சாலப், பயமுறத்தான் பிறந்துபிறந்தலுத்தேனெந்தன்பரிதாபம்பார்க்கவுந்தன்பரமேயன்ரே, ஜெயமுறவேயாவர்க்கும் பிண்டிநீழற் ஜினபதியேதேவர்கள்பாரீச நாதா, நயமுறவே நறுங்கொண்டையருகாவுன்னே நம்பினேனின்பதத்தை நல்குவாயே. 7

இன்மையிலுந்தவம்புரியாப் பொல்லாமூடனேற்கமனம்பொருந்துமிடம் பொருந்தாயின்ன கன்மன்வெகுதுட்டனறிவில்லாக் கோழைக் கன்னியர் மேலாசையுறுங்கபடனேனுந், தன்மமுனக்கே பரங்காணுரும்பூவுஞ் சத்துமனமில்லாததயவுபோல, நன்மைசெறி நறுங்கொண்டையருகாவுன்னே நம்பினேனின்பதத்தைநல்குவாயே. 8

கட்டளேசேர்சமயமோராறுந்தாஞய்க் கலந்தறியசமயமதில்மேலதாகும், யிட்டமுடனேயிருந்தேயறமேகூர்தந் தெட்டாததத்துவனேயேகநாதா. வட்டமணிமுக்குடையாய்மாசிலாதாய் வானவர்கள் தொழுதேத்தும்வண்மையானே,நட்டணேசேர்நறுங்கொண்டையருகாவுன்னே நம்பினேனின்பதத்தை நல்குவாயே. 9

ஏற்றரியபதத்தானேயினியஜோதி யாவரையுங்கிருபைசெய்து ரக்ஷிப்பானே, மாற்றரியவென்பிறவிதுரத்தக்கண்ட மன்னவனேகருணைபொழிவடிவுள்ளானே, சாற்றரிய விருத்தமோர் பத்துஞ்சொன்னேன், தயவுபுரிந்தெனையாளத்தன்மங்கண்டாய், நாற்றியசீர்நறுங்கொண்டையருகாவுன்னை நம்பினேனின்பதத்தை நல்குவாயே. 10

சொல்லியலையானறியேன் முன்னுள்செய்த தொழுதலுமோர் சொப்பனத்தேதோன்றிப்பண்பாய், அல்லலறுத்தாட்கொண்டதேவனுகு மறங்காத்த நாயகர் தம்மருளினாலே, வல்லியருமலைகாவலஞ் சொற்பத்தும் மருப்பொதியுமாலையதாய்மகிழவேண்டும், நல்லியல்சேர்நறுங்கொண்டையருகாவுன்னை நம்பினேனின்பதத்தை நல்குவாயே. 11

முற்றும்.

ஸ்ரீ

ஸ்ரீஜிநாயநம :

## திருநறுங்கொண்டை அப்பாண்டைநாதர் பேரில் சம்பந்தர் பாடிய பதிகம்.

---

ஜோதிமூன்றினு ளெழுதருதுகளறு ஜோதிதுளங்கவெந்துயர் களைந்திடும் வளங்கெழுதுணையே, காதிவெவ்வினை புறங்கண்டகருணையங்கடலே கடலின்மேல்வருங் கருங்கடல்வண்ணவொண் கதிரே, போதிநாதனே பூரணவாரணத்தலைவா பொங்குசாமரைமாருதத்துடனெழும்புயலே, ஆதியேதிருநறுங்கொண்டை வடதிருமலைமேலப்பனே யடியெனையுமஞ்சலென்றருளே. 1

பண்ணவாமுதற் பரமனேபரமகேவலியே பாபநாசனே மூவர் நாயகமுதற்கொழுந்தே, எண்ணவாவியெண்குணங்களுக்கிறைவனேயிறைவாயெங்களுயகனே சிங்கவாகனத்தினிதிருந்தே, கண்ணுளேவருங்கடவுளே சுடருளேமயங்கிக் கலங்குநாயினேன்கடைப்பிடிபிடித்தகைப்பொருளே, அண்ணலேதிருநறுங்கொண்டை வடதிருமலைமேலப்பனே யடியெனையுமஞ்சலென்றருளே. 2

முத்தனேமுதற் பொருளெங்கையுமருளிய முதலே முதலுமீறு மொன்றின்றியே முளைத்ததோர் முளையே, சித்தனே திருமயிலையினின்றதோர்தெளிவே தீபநாயகா மேற்றிசைத்தொழுததோர்தேனே, பத்தனேதொழுவெளி வந்தவெளிமுதற்பரப்பே பறம்பைமாநகர் குடதிசைப் பச்சைமாமலையே, அத்தனே திருநறுங்கொண்டை வடதிருமலைமேலப்பனே யடியெனையு மஞ்சலென்றருளே. 3

மெய்யனேபரந்தகண்டமும் விரிந்தபேரொளியே வீதராகனே நாதனே விமலவச்சுதனே. உய்யனேசம்பந்தனுக் கருளியவொப்பே வொப்பிலாததோ ரொப்புடையொளிமணிச்சுடரே, கையனேபரந்தறநெறிகாட்டியகணக்கே காலகாலனேமூலமந்திரமுதற்பொருளே, அய்யனே திருநறுங்கொண்டை வடதிருமலைமேலப்பனே யடியெனையுமஞ்சலென்றருளே. 4

விரைசெய்நாண்மலர்மேல் வரும்வேந்தனேவேந்தா வேந்தபாந்தளப்பணநிழ லமர்ந்தவேதியனே, பரசுநேரெனவருவினைப்பகைவனேசுகதாபரமகேவலி பாரீசநாதனேவீரா, பிரசநாண்மலர்பிண்டியிற்கண்டபேரமுதே பிறங்குபேரொளி கேவலத்தரசியைப்பிரியா, வரசனேதிருநறுங்கொண்டை வடதிருமலைமேலப்பனேயடியெனையுமஞ்சலென்றருளே. 5

துறைவனேமுறைமறைபொறிகடந்ததோரறிவே சுருதியாவையுங் கருதியவொருபொருட்சொல்லா, லுறைவனேமனத்துள்ளுறைகின்றதோருணர்வே வொருபொருட்டிடத் துண்மையுமின்மையுமுரைத்தாய், நிறைவனேவெண்கதிரொளி நிலவியநிலவேநித்தனேகருமப்புறங்கண்டதோர்நிருபா, அறவனேதிருநறுங்கொண்டைவடதிருமலைமேலப்பனே யடியெனையுமஞ்சலென்றருளே. 6

கமலவாகனனே வேதமெய்ப்பொருளறி கருத்தேகருத்துமைமந்துகைக்காட்டியதிக்குடைக்கனியே, விமலமூர்த்தியேவேந்தவெவ்வினைவிழவெறிந்த வொண்மணிச்சுடரே தெள்ளுமாமணியொளி விளக்கே, எம்மலம்யாவையுங்கழுவிய பொழிதருபுனலே யெழுமியாழகத்தின்பனேயன்பருக்கெளியாய், அமலனேதிருநறுங்கொண்டை வடதிருமலைமேலப்பனே யடியெனையுமஞ்சலென்றருளே. 7

கனகமூவெயிற் பிறந்ததோர்கரும்பே யக்கரும்பிற்கட்டியே கட்டியுட்பிறங்குசர்க்கரையே, ஜினகமேல்விரிந்தோங்கிய சிகரமால்

வரையே தெரிந்தமாமுரசெனத்தரு திருமொழிச்சினனே, எனகமேபு
குந்திடர் கெடுத்திடும்படிக்கினி யாகினிலுமாற்றலீற் பணிகொளு
மீசனேநேசா, அனகனே திருநறுங்கொண்டை வடதிருமலைமே
லப்பனேயடியெனையுமஞ்சலென்றருளே. 8

பொறிகடந்ததோர்போகமே புண்ணியவுருவேபுண்ணியக்கதி
நண்ணியிற்கண்டதோர்பொழிப்பே, எறியமேல்வருங் கபடனுக்கரு
ளியவேந்தேயெந்தைதந்தை யென்றிமையவர்தொழவிருந்தவனே,
குறியசம்பந்தனெஞ்சினுட் கோயில்கொண்டவனே கொண்டலே
குணக்குன்றனேயென்றனுயகனே, அறிவனேதிருநறுங்கொண்டை
வடதிருமலைமேலப்பனே யடியெனையுமஞ்சலென்றருளே. 9

பருகநின்றுநின்பதந்தர நிகழ்ந்தபேரமுதே பச்சைமேருவேகச்
சுறுபிறவியங்கடலுள், வருகநேரென வருமொருவங்கமே யெந்தன்
மனத்துளே புகுந்தகங்குளிர்வெய்தியமருந்தே, பெருகநீடியான்
முன்பிறந்திறந்ததற் கிரங்கிப்பின்னையென் னகத்தினின்னலம்பொருந்
தியபிரானே, அருகனேதிருநறுங்கொண்டை வடதிருமலைமே லப்ப
னேயடியெனையுமஞ்சலென்றருளே. 10

ஜோதியேமுதற்பரமனேபண்ணவர்துணைவா துய்யவந்தரமேல்
வருமெய்யனேபுனிதா, வேதனேனின்னிருபதம் விளங்கியவிமலா
விரைசெய்நாண்மலர் பரித்திடமேல்நடந்தவனே, காதியாகியநால்
வினைகடிந்தநற்றவனே கனகமூவெயிற்கடந்ததோர்கமலவாகணனே,
ஆதியேதிருநறுங்கொண்டை வடதிருமலைமேலப்பனே யடியெனையு
மஞ்சலென்றருளே. 11

முற்றும்.

ஸ்ரீ

ஸ்ரீஜிநாயநம:

# திருநறுங்கொண்டை
# அப்பாண்டை நாதர்பேரில் கட்டளைக் கலித்துறை

குற்றங்க ளில்லான் குணத்தால் நிறைந்தான் குணத்தால்
மற்றிந்த வைய மளந்தான்வைய நின்ற பெற்றி
முற்று முரைத்தா னுரையீ ரொன்ப தாய்த்தோன்றுன்
செற்றங்க டீர்ப்பான் விமலன் சரண் சென்னி வைத்தேன். 1

கண்டேன் திருநறுங் கொண்டையின்மேலொரு காரணத்தால்
கண்டேன் கனக திருமதில் கோபுரங் கோயில்தனை
கண்டேன் மனதினிலப்பாண்டை நாதரென் கர்த்தரடி
கண்டேன் யிடரதனை விண்டேன் எந்தன் கருத்துள்ளமே. 2

எப்போது முனைமறவாதிருக்க வென்னெஞ்சுதனில்
ஒப்பாரும் பிண்டி நீழலுறைந்திடுஞ் சிநேஸ்வரனே
மெப்பாக எந்தன் வினைதனை தீர்த்து நான் வீடுசேர
தப்பா வரமருள் அப்பாண்டை நாத தயாபரனே.

நீதான் துணையன்றி வேறு முண்டோ இந்த நீணிலத்தில்
ஆதாரமாக அரும் பொருளே அண்ட ரண்டமெலாம்
மாதாவை யுந்தன் திருநறுங் கொண்டை தழைக்க வந்த
நாதா அறம்பொழி வேதா யெனக்கின்பம் நல்குவையே. 4

சீரா யெவருங் கமலத்தின் மீது திரு முக்குடைக்கீழ்
வீரா யெனது வினைதீர்த்துச் செல்வம் விளங்கிடவே
காரார் நறுங்கொண்டை காவலனே எனக்குன் கமலமலர்
தாரா யருளுடன் அப்பாண்டை நாத தயாபரனே. 5

முற்றும்.

ஸ்ரீ

ஸ்ரீஜிநாயநம:

# திருநறுங்கொண்டை மகாசாத்தய்யா பேரில் பதிகம்.

---

திருவழகுமுடிதனிலருகனைதரித்ததோர் சிங்காரமானமுகமுந்-திலதமும்நவரத்ன மாணிக்கவொளியுமுன் செவியும்வெண்முல்லை நகையுங், கருணையுடன்மார்புதனில் முத்துமாலைகளுடன் கஸ்தூரி பரிமளிப்பும்-கனகமயமானதோர் அரையிற்பீதாம்பரம் கச்சை பொன் குச்சிதொங்கல், அருளுடனேயெந்தனிட மனமகிழவே தின மளித்திடுங்கரத்திற்சென்று-அலங்காரமாகவே சிலம்புடன் சதங்கையிட் டாடிவருபாதமழகுந், திருவடியும்வெள்ளானை மீதி லென்கண்முன் வருந்திருநறுங்கொண்டை மலைவாழ்-தேவனே அறங்காக்கு மையனேமெய்யனே செல்வந்தந்தருள்தேவனே.

ஆகாசமாகப் பறந்திடும்புரவிக ளனேகங்கள் முன்னேநிற்க, ஆனையும் ஒட்டையும் நூறுநூருயீர மஞ்சலாய் வந்துநிற்க, ஏராள மாகவே படைமன்னரொருகோடி விருதுகள்பிடித்துநிற்க-வெற்றி பெறுமாலைகள் யுத்தரணவீரர்கள் வெதும்பியொருகோடிநிற்க, ஏகாந்தமாகவே தேவதுந்துபிகளு மின்பசங்கீதமோங்க-ஈரமதியிர வியுந்தீவர்த்திபோலவே யிருபக்கமும் இலங்க, தேவனென்வெள் ளானை மீதிலென்கண்முன்வருந் திருநறுங்கொண்டைமலைவாழ் - தேவனே அறங்காக்கு மையனேமெய்யனே செல்வந்தந்தருள் தேவனே. 2

மத்தளங்கொட்டிவரும் பக்தர்களொருகோடி மல்யுத்தவர் கள்கோடி-வல்லயங்கத்திகள் பிடிமன்னரொருகோடிமகுடவர்த்த னர்கள்கோடி - பத்தியுடன்வேதபா ராயணம்பாடிவரும் பெரி யோர்களொருகோடியாம் - பட்டாணிராவுத்தர் புரவிமேலொரு கோடி பணிவிடைகள் செய்வர்கோடி, எத்தனைவீணைகள் தும்புரு நாரதர் யெடுத்துவாசித்துவரவே-யிரவினிற்பவனிவரு முந்தனிட மகிமையை யெந்தனுல்சொல்லவசமோ சித்ரமணிவெள்ளானை மீதி லென்கண்முன்வருந் திருநறுங்கொண்டைமலைவாழ் - தேவனே அறங்காக்குமையனே மெய்யனே செல்வந்தந்தருள்தேவனே. 3

சிங்காரமாயுனது குன்றதிர ஙித்தமுந் திருப்பணிகளே செய்ய வுந்-தெய்வபரிமளமான பாரிஜாதம்மலர் சிரசினில்தரித்து வரவும், ஐங்காதமாகிலுங் கடுகிவந்தபிஷேக மர்ச்சனைபுரிந்துவரவும்–அன்பி னுல்நைவேத்தியஞ் செய்துனதுபாதத்தை அனுதினம்புகழவைப்பா ய், கண்காணவென்றன்முன் வந்துப்ரசன்னமாய்க் கவலைநோய்தனை விலக்கிக்-கருணையாலென்மனது வேண்டும்வரமேயருள் கர்த்தனே ஹரிஅரகுமரனே, தெம்பானவெள்ளானை மீதிலென்கண்முன்வருந் திருநறுங்கொண்டைமலைவாழ் - தேவனே அறங்காக்கு மையனே மெய்யனே செல்வந்தருள்தேவனே. 4

மல்லிகைமாலைகொண் டுன்னுடையபாதமே மறவாமல் பூஜை செய்வேன்–வஞ்சனைப்பில்லிமுதல் சூனியமவையெலா மகன்றிட வடித்தோட்டுவாய், சொல்லரிய பாவங்கள் செய்திடினுமேயொரு திரணமாய்ப்பறக்கடிப்பாய்த்–தொலையாதமாய்கையி லலையாமலுன் பாதமெனக்குவரமேயருளுவாய், கல்லுமனதாய்வரு மடியவர்கள் நெஞ்சங் கரைத்தடிமைகொள்ளுகின்ற-கர்த்தனேஇப்பூமி லோகங் கள் தேசங்கள் காவல்காத்தருளையனே, செல்வனெனும் வெள் ளானை மீதிலென்கண்முன்வருந் திருநறுங்கொண்டை மலைவாழ் தேவனே அறங்காக்கு மையனேமெய்யனே செல்வந்தருள் தேவனே. 5

ஙித்தமை சுவர்யமாய்ச் சுகமான வாழ்வதாய் நீதியாய்த் தர்ம மீவாய்-நெஞ்சினில்யாவர்க்குமுபகாரகுணமதாய் ஙிஜமானமொழி யுள்ளதாய்ப், புத்தியுமீந்தென்னை யிப்பூமிதன்னிலென் பிறவிதனைவே ரறுத்து-பெருமையுடனேயிருந் தருளுனதுபாதமே போற்றவேவர மருளுவாய், பத்தியுடனடியவர்கள் வல்பிணிதொலைத்திடும் பாதபூங் கடல்வண்ணனே-பாவங்களானவை யணுகாமலென்றனை பக்ஷ மாய்க் காத்தருளுவாய், சித்திரவெள்ளானை மீதிலென்கண்முன்வருந் திருநறுங்கொண்டைமலைவாழ்-தேவனே அறங்காக்கு மையனே மெய்யனே செல்வந்தருள்தேவனே. 6

தந்தைநீ தாயும்நீ சற்குருவுதெய்வம்நீ தானென்றுநானிருக்க- தயவுவைத் தென்மனத் துயர்தீர்ப்பதில்லையோ சம்பத்தளிப்பதிலை யோ, முந்தியஜென்மத்தில்யான் பாவங்கள் செய்ததோ மூடனென் செய்தெனோ-மோசங்களான கொலை பாதகஞ்செய்தெனோ மூடனுன் வதைசெய்தெனோ, எந்தவினைசெய்யினும், தீர்த்துரக்ஷித்தென்னை

யீடேற வரமருளுவாய் - எத்தேசகாலமு மழியாதபதவியை யீந்தென்னை யாட்கொள்ளுவாய், சிந்தைமகிழ்வெள்ளானைமீதிலென் கண்முன் வருந் திருநறுங்கொண்டைமலைவாழ் - தேவனே அறங் காக்கு மையனேமெய்யனே செல்வந்தந்தருள்தேவனே. 7

கடல்தனில்வாழ்கின்ற மச்சமதையெண்ணினுங் கரைதனில் மணலெண்ணினுங்-கார்மேகமேபொழியு மழைத்துளிகளெண்ணி னுங் கன்னியர்மனங்காணினும், நடமாடுங்காயம்விட் டுயிர்புவியில் பிறவிதனை நானிருந்தெண்ணமாட்டேன்-நாதனேயென்பிறவி வேர றுத்துன்பாதம் நல்கிடவரமருளுவாய். படஅகமாமணிகளாபரண மாகவே பண்புடன் பூண்டிருக்கும்-பரமனே வரதனே சத்துருசங் காரனே பராபரமகாதேவனே, திடமானவெள்ளானை மீதிலென்கண் முன்வருந் திருநறுங்கொண்டைமலைவாழ் - தேவனே அறங்காக்கு மையனேமெய்யனே செல்வந்தந்தருள்தேவனே. 8

கையினாலுந்தனைத் தரிசனஞ்செய்யவே கருமங்கள்விட்டோ டுமே - கண்ணிலாமனிதர்களுன்னுடையசன்னதி காணவேகண்வி ளங்கும், பொய்யனுய்க்காலுகை யில்லாதமூடனுய் வாழ்ந்துபின்னந் தியத்தில் - புண்ணியமவனுக்குவந் தெய்தியுன்பாதமலர் புகழால் நிறைந்தவரமே, அய்யனேமெய்யனே ஆதியேநீதியே யனுதினந்துதி செய்வித்து - அன்பினாலுந்தனிட கிருபையால் சொர்க்கத்திலன் பர்க்குவாழ்வளித்தாய் செய்யனேவெள்ளானை மீதிலென்கண் முன்திருநறுங்கொண்டைமலைவாழ் - தேவனே அறங்காக்கு மையனேமெய்யனே செல்வந்தந்தருள்தேவனே. 9

என்னுடையமனதினில் நீயிருந்தருளுகின்ற யிசையான பாடல்பத்து மின்பமுடனேயிரு யேமஜாமத்திலுமெதிராளி வந்த போதும், பின்னுமொரு நித்திரைகள் தன்னிலுமிப்பாடல் போற்றித் துதித்தவர்க்கு - பில்லிமுதல் சூனியம் அணுகாமல் விட்டோடிப் பெரியோர்களாகி வாழ்வார், பன்னுதமிழாலுனைப் பாடிடுமடிய வர்கள் பாவங்கள் தனைவிலக்கி - பதவிதனில் மேலான நற்கதி யாகவே பண்புட னளித்தருளுவீர், தென்னல்தனில் வெள்ளானை மீதிலென்கண்முன்வருந் திருநறுங்கொண்டைமலைவாழ் - தேவனே அறங்காக்கு மையனே மெய்யனே செல்வந்தந்தருள்தேவனே. 10

ஸ்ரீ

ஸ்ரீஜிநாயநம:

## திருநறுங்கொண்டை மஹா சாத்தய்யா பேரில் கட்டளைக் கலித்துறை

அடியார்க் கெளியன் அறங்காத்த தீர னருகனிட
படிகாவ லாதிபாவுன்னைநா னிப்போதென் பயமனதால்
வடிவான தீரனை கோலாகலனை வழித்துணைக்குத்
தடியாயுதனை அனுப்புமையா மஹா சாத்தையனே. 1

அண்டாத பூத பிசாசுகள் சூன்ய மநேக மெல்லாம்
துண்டாடி வோட்டி அடித்துத் துரத்தி யனல் சுட்டெரிக்கக்
கொண்டாட மானிடர் செல்வந் தழைக்க வரங் கொடுக்குஞ்
செண்டாயுதா திருநறுங் கொண்டை மேவிய சேவகனே. 2

முற்றும்

ஸ்ரீ

ஸ்ரீஜிநாயநம:

## திருப்பரித்திக் குன்றப் பத்தும் பதிகம்.

பெருவானமினிதாளு மமரராயும் பேரான துயராளு நரகராயும், கருவான சிறையறைசேர் மனிதராயுங் கடையாய விலங்காயுங்கதிக டோறும், உருவான பலபலகொண் டனந்தங்காலமுழன்றலைந்தே னினியுழலா தொழிக வென்றுன், திருவான திருவரம்வந் தடைந் தேன்காஞ்சித் திருப்பரித்திக் குன்றுறையுஞ் செம்பொற்குன்றே. 1

வந்தனைசெய் திரக்கின்றே னெனக்கு நீயோர் வரந்தருவாய் வழுத்தாவில் கதிகட்செல்லும், அந்தமில் செம்பத முடையாய் நின்னை மற்றோ ரரும்பதம்யான் வேண்டுகிலே னடியேன்கொண்ட, இந் தவுடல் விடும்பொழுதுன் பதமோரைந்து மெழின்மலர்மேல் வரும் பதமோரிரண்டு மென்றன், சிந்தையுளே வைத்தருள வேண்டுங் காஞ்சித் திருப்பரித்திக் குன்றுறையுஞ் செம்பொற்குன்றே. 2

துற்றின்பமென நுகர்ந்து தெரிவை மாதர் தோளின்பமென வணேந்து துறவாச்சுற்றம்,பற்றின்பமுடையாரைப்பரமரென்றுபணி வார்கள் பணிகநின்னைப் பணிந்தோர்க் கெல்லாம், முற்றின்ப மளித் தாலும் முதல்கெடாத முழுவின்பமுடையாய்மோகத்தாற்றுய்க்கும், சிற்றின்ப மிலாதாயை யடைந்தேன் காஞ்சித் திருப்பரித்திக் குன் றுறையுஞ் செம்பொற்குன்றே. 3

தொல்வங்கள் வினையென்னுந் துகளால்மூடித் தோன்றாதே முகில்மறைசெஞ் சுடர்போல் நின்ற, நல்வெங்கள்யானுடையஞான வாதி நற்குணங்கள் பெறவமையு நாயினேற்குப், பல்வங்கள் பதின் கோடா கோடிகொண்ட படுகடலா யுகம்பலவும் படைத்த தேவர், செல்வங்களே பெரினும் வேண்டேன் காஞ்சித் திருப்பரித்திக் குன் றுறையுஞ் செம்பொற்குன்றே. 4

காப்பர்நமைத் தேவரெனத் தேவரல்லாக் கடவுளரைக் கடவு ளெனக் கருதிக்கல்லின், மாப்படவு கொடும்பரவைக் கரையைக் காண்பார் மாலுற்றார்மாலுருகி மறைந்துதோன்றும், நீப்பிலகத் திரு மேனி நிறைவன் சென்னி நினைக்காண பெயர்பிறவிக்கடலை நீந்துந், தேப்பையெனக் குன்சரணே கண்டாய் காஞ்சித் திருப்பரித்திக் குன்றுறையுஞ் செம்பொற்குன்றே. 5

நேரேனின் னறமலதோ ரறமுண்டென்று நினையேநின் னிறை குணங்க ளன்றியொன்றும், பாரேனென் மனங்கொண்டு நின்னையல் லால் பணியேனென் சிரங்கொண்டுகரங்கள்கொண்டு, பேரேனின் றிருமொழியை விட்டுக்கேட்டப் பெருநாகத் துருநயவா திகடன் பாலுஞ், சேரேனின் றிருத்தருமஞ் சேர்ந்தேன் காஞ்சித் திருப் பரித்திக் குன்றுறையுஞ் செம்பொற்குன்றே. 6

நரம்பற்ற நல்லியாழு நன்றூர் முன்னர் நாணற்ற நீள் சிலையும் போலஞாலத், துரம்பெற்ற வுடல்பெற்று நின்னைப்போற்று ருணர்வ ற்றுறென்குலத்தார் நின்னைத்தேறி, வரம்பெற்ற நின்குணங்கள் வாழ் த்தப் பெற்றேன் வாய்பெற்றபயன்பெற்றேன் வணங்கப்பெற்றேன், சிரம்பெற்ற பலன்பெற்றே னடியேன்காஞ்சித் திருப்பரித்திக் குன் றுறையுஞ் செம்பொற்குன்றே. 7

கூடியகூடிய வுடலங்தோறு மீன்றுகுழைங்தெடுத்ததாய் தந்தை விழைந்தமாதர், நீடியபல் கிளைபடைத்த நிதியமென்று நினைத்தலரி தெம்பெருமா னெனக்குநேசம், நாடியதாயாவாயும் பிதாவாவாயும் நாடியே நவைகெட வைத்தின்னுள் கூடித், தேடியமாடாவாயும் நீயே காஞ்சித் திருப்பரித்திக் குன்றுறையுஞ் செம்பொற் குன்றே. 8

பெருமாலே தருங்கடகச் செவ்வாய்நவ்விப் பிணையனைய சிறுநோக்காற் பிறங்குபாசந், தருமாலே வளர்முலைமேல் தாழ்ந்துநின்னைத் தாழாது கிழானேன் தமியேன் சங்கம், பெருமாலே கடலோகலோகந் தந்த பூரணனே புனிதனே புகரில் ஜோதித்திருமாலே திசைமுகனே சிவனே காஞ்சித் திருப்பரித்திக் குன்றுறையுஞ்செம்பொற் குன்றே. 9

பாறினேனித்தனைகாலமுநின்பாதம் பணியாதிப் பதமில்லாப் பதமேபோய்ப்பித், தேறினே னிழிந்தகதி யெங்குமுன்புக் கென்னை நானறிந்திலே னின்னைநேர்பட், டாறினே னஞ்சினேன்கதிகள்நான்கும் விரோதியாய் நின்னருங் கலங்கள் மூன்றுந், தேறினே னுய்ந் தொழிந்தே னடியேன்காஞ்சித் திருப்பரித்திக்குன்றுறையுஞ்செம் பொற்குன்றே. 10

மாயவினைப் பெருவானத் தமரராயும் வந்தனைசெய் துற்றின்பமனிதராயுங், காயவினைத் தொல்வங்கள் நரகராயுங் காப்பரிய விலங்காயுங் கதிகணேரே, ஆயநாம்பி வையதனை யனைத்துங்கூடி யறுத்தருளும் பெருமானே யருகாவென்றன், தீயவினை யாறும்வண்ணம் சேர்ந்தேன்காஞ்சித் திருப்பரித்திக் குன்றுறையுஞ் செம்பொற் குன்றே. 11

முற்றும்

ஸ்ரீ

ஸ்ரீஜிநாயநம:

# ஸ்ரீ வர்த்தமான ஸ்வாமிபேரில் தோத்திரப் பதிகம்.

ஆதியாயுலகியல்பை யளித்தாய்நீயே, அருந்தவனுயறம்பகர்ந்த அறிவனீயே, காதியாயிருவினையைக் கடிந்தாய்நீயே, கணமீராறடி யேற்றுங்கடவுணீயே, போதியாய்ப்பொருளளவு மானய்நீயே, பொறிவாயிலைந்தவித்த புனிதனீயே, சேதியாய் நிலவுகுணச் செல்வ னீயே-ஸ்ரீவர்த்தமானனெனுந் தீர்த்தனீயே. 1

அங்கமவையாறிரண்டு முரைத்தாய்நீயே - அலர்மழைதுந் துபியுடைய வமலனீயே, கொங்குலவு மலர்ப்பிண்டிக்கோமானீயே- குடையொருமூன்றுடையகுணதரனுநீயே, பொங்கியசாமரைபொழி மண்டலத்தாய் நீயே - புரந்தரனு லியற்றிய பொன்னெயிலாய் நீயே, சிங்கவணைமேலமர்ந்த செல்வனீயே - ஸ்ரீவர்த்த மானனெனுந் தீர்த்தனீயே. 2

நவபதமெண் குணமுரைத்த நாதனீயே-நயமேழு மருபொரு ளும்நவின்ருய் நீயே, வுவமயிலேம்பதஞ்சரணன் குரைத்தாய் நீயே- யொருமூன்று பிறப்பினையு மொழித்தாய் நீயே, பவமயமா மிருவினை யும்பகர்ந்தாய்நீயே–பரமநிலை யுலகுதொழபணித்தாய் நீயே, சிவமய மாய்நின்றதிகம் பரனுநீயே–ஸ்ரீவர்த்தமானனெனுந் தீர்த்தனீயே. 3

ஒருமொழியா லிரண்டறமு முரைத்தாய்நீயே-வுலகொருமூன் றடியேத்து மொருவனீயே. வருகதிநான் கைவதமும் வகுத்தாய் நீயே - வான்பொருளா றேழிருத்திமதித்தாய் நீயே, பொரு வினைய மெட்டொன்பான் பொருளு நீயே-புகழ்தருமத்தியானம்பத் துரைத் தாய் நீயே, திருமறுவா யிரத்தெட் டிலக்கணத்தாய் நீயே - ஸ்ரீவர் த்தமான னெனுந் தீர்த்த னீயே. 4

கருவான சிறைகளைய வல்லாய் நீயே - கல்யாண மைந்துடைய கடவுணீயே, மருவான பூம்பிண்டி மன்னனீயே-மறையொருநான் குரைத்ததிரு வள்ளனீயே, பெருவான மினிதாளும் பெம்மானீயே - பெண்ணுருவு மாணுருவு மானய் நீயே, திருமாலு நான்முகனு மானய் நீயே - ஸ்ரீவர்த்த மானனெனும் தீர்த்த னீயே. 5

பொறியொடு வல்வினைவென்ற புனிதனீயே - பூநான்கு மலர்ப் பிண்டி போதனீயே, புறவிதழ்சேர் மருமலர்மேல் விரலுல்விட்டுப் - பொன்னெயிலுண் மன்னிய புங்கவனுநீயே, யறவுபணி பணவரங்க த்தமர்ந்தாய் நீயே - ஐங்கணைவின் மன்மதனை யகன்றாய் நீயே, செறிபுகழ்சேர் சித்தநகர் தன்னை யாளும் - ஸ்ரீவர்த்த மானனெனுந் தீர்த்தனீயே. 6

கஞ்சமலர்த் திருமார்பிற் றரித்தாய் நீயே - காலமொரு மூன் றுணர்ந்த கடவுணீயே, பஞ்சாஸ்தி தானுரைத்த பரம னீயே - பரமநிலை யொன்றெனவே பணித்தாய்நீயே, துஞ்சாம லுலகுதொ ழுந் தூய னீயே - தொல்வினை யெலாமெரித்த துறவனீயே, செஞ் சொற் பாவையை நாவிற் சேர்த்தாய் நீயே-ஸ்ரீவர்த்தமான னெனுந் தீர்த்த னீயே. 7

அறிவனீ அமலனீ யாதி நீயே - யாரியனீ சீரியனீ யனகனீயே, திரிலோக மோடுதொழு மெந்தாய் நீயே – தேவாதி தேவனெ னுந் தீரனீயே, எரிமணிநற் பிரபை யுடைய யீசனீயே - யிருநான்கு குணமுடைய விறைவனீயே, திரிபுவனந்தொழுதிறைஞ்சுஞ்செல்வ னீயே - ஸ்ரீவர்த்த மானனெனுந் தீர்த்த னீயே. 8

முனிவர் தமக்கிறைவனெனும் மூர்த்தி நீயே - மூவாத முதல்வ னெனும் முத்தனீயே, யினிமையான னந்தசுகத் திருந்தாய் நீயே - யியலாறுபொருளுரைத்த யீச னீயே, முனிவுமுத லில்லாத முனைவ னீயே - முக்குடையின் கீழமர்ந்த முதல்வனீயே, ஜெனித்திறக்கும் முப்பிறப்பும் தீர்த்தாய் நீயே - ஸ்ரீவர்த்த மானனெனுந் தீர்த்த னீயே. 9

நவபதநன் னயமாறும் நவின்றாய் நீயே - நன்முனிவர் மனத்தி சைந்த நாத னீயே, வுவமையிலா வைம்பதமு முரைத்தாய் நீயே - உத்தமர்தம் இதயத்து ளுவந்தாய் நீயே, பவமொழியவினைவென்ற பகவனீயே - பரமநிலை யமர்ந்தபரம் பரனு நீயே, சிவ மயமாய்நின்ற திகழ் தேச னீயே – ஸ்ரீவர்த்த மானனெனுந் தீர்த்த னீயே. 10

முற்றும்.

ஸ்ரீ

ஸ்ரீஜிநாயநம:

# திருப்பறம்பூர் ஸ்ரீ தர்மதேவியம்மன்பேரில் கட்டளைக்கலித்துறை

அறம்பாவ மீதென் றறியேன் வினைப்பகை யத்தனையும்
புறம்பாக நின்றிரு பொன்னடிதாபுயல் போலிதங்கும்
நிறம்பாகு நேர்மொழி நேரிழையேவண்டு நித்த நித்தந்
திறம்பாடுஞ் சோலை பறம்பாபுரிதர்ம தேவதையே. 1

கரமேகுவித்தொரு கால்வணங்கேனென் கபடொழித்து
வரமே கொடுத்தென்னை வாழ்விக்கவேணு மகிழ்ந்தருக
பரமேஸ்வரரிரு பாதாரவிந்தம் பணிந்து நித்தஞ்
சிரமேலணிந்த பறம்பாபுரிதர்ம தேவதையே. 2

மின்னின்ற செஞ்சொல விரோதியினிரு விளக்கொளிபோல்
முன்னின்ற ஞானமொழிச் சுடரேநின் முகமலர்ந்து
சொன்னின்ற வண்ணந் துணைசெய்த கார்வயற் சோலையெங்குந்
தென்னின்ற வண்ணப் பறம்பாபுரிதர்ம தேவதையே. 3

நாவரமுத்தமிழ் நல்வாக்கு நீயருள் நன்முகமுந்
தாவரமாகநின் தற்பரமே நின்தயை புரிவாய்
மூவரு மூவுலகத் தரசாளு முடிதரித்த
தேவரும் போற்றும் பறம்பாபுரி தர்ம தேவதையே. 4

சாந்தத்தொளியுந் தரளப்பொற்றேடுஞ்சசி முகமுங்
காந்தட்கரமுங் கமலப்பொற்றேடுங் கயல்விழியுங்
கூந்தற்கமுகு நிழலுங்கண் டேனென் குறைதவிர்ப்பாய்
சேந்தத்திரி பொன்பறம்பாபுரிதர்ம தேவதையே. 5

ஆவிக்கு நற்றுணை யாகியஞான மளவரியாப்
பாவிக்கு நின்னருள் பாலிக்கவேண்டும் பரந்தமரர்
வாவிக்குள்வளற் ருமரைகொணர்ந்தருள் மாதவன்றுள்
சேவிக்கு மெங்கள் பறம்பாபுரி தர்ம தேவதையே. 6

ஊருமுலகு முறவும் பிறப்பு முயர்தந்தைதா
யாருஞ்சதமல்ல நின்ருள்சதமென் றடைந்தவென்னைக்
காரும் நினதருள் காணேனென்னம்மை கதலிவயல்
சேரும் பறம்பாபுரி மேவிவாழ் தர்மதேவதையே. 7

மலையாகவே வந்த வல்வினை தீர்த்தென் மனங்களைபட்
டலையாமல் வாழ்வுதந் தஞ்சலென்பாய்நல் மாதவர்க்கு
நிலையான தானமும் நேசத்திலீந்த நிபுணியிந்திர
சிலைவாணுதலிப் பறம்பாபுரி தர்ம தேவதையே. 8

ஒழிக்கும் வினைவகை யெல்லாமொழித்தும் ஒழிந்தகதி
வழிக்குந் துணைசெய்ய வல்லவனே வண்மை வயலில்
கொழிக்கு மந்தாரமுங் கோகிலங் கூவுங் குளிர் நிழலுஞ்
செழிக்கும் பறம்பாபுரிமேவி வாழ்தர்ம தேவதையே. 9

கள்ளம தான்மனத் தென்னைக்காக்கநின் மனங்கசிந்திட்
டுள்ளமதாக வுகந்தருள்வாயுல கோர்புகழும்
வெள்ளமுதார்வியந் தொண்டைநாட்டினில் விண்ணோர்புகழுந்
தெள்ளமுதேநற் பறம்பாபுரி தர்ம தேவதையே. 10

முற்றும்.

ஸ்ரீ

ஸ்ரீஜிநாயநம:

# திருமயிலாப்பூர் பத்தும் பதிகம்.

உலர்தழைப்ப வொளிதிகழ்மூ வாமதிமுக்குடையானை யடலா ராழி, வலர்தழைக்கும் வண்மயிலை மன்னவனை மணியைமுன்னு, ளலர்தவத்தின் பொருள்நாடி வேசத்துபாசத்தே யழுந்தி யந்தோ, நிலர்தொகுத்துக் குண்டிகையை நிறைப்பான்போ லமர்ந்திருந்த நீசனேனே. 1

எல்லிருக்க மணிமுடிசாய்த் திந்திரரு நரேந்திரரு மெல்லை யில்லாச், சொல்லிருக்குந் துறவோரும் தொழுமயிலாப் புரிநின்ற துணையை முன்னுள், மல்லிருக்கு மலர்கொண்டு வணங்காதே மாத ரார் வலைப்பட்டந்தோ, யில்லிருக்க நல்லறஞ்செய்யா திருமாந்திட்டி ருந்த வேழையயேனே. 2

முதிர்முகிலிற் புலியரவ முரசியம்ப முனிகணமு முறையி னேற்ற, வதிர்முழவக் கடல்நடு வண்டந்தரமே வந்துதிரு மயிலை நின்ற, சதுமுகனைத் தாழாதே தத்துவத்தின் றன்மையினைத் தவிர்ந்து நாளும், கதிர்புறம்பாயப்பேர்த்ததுகண் கருத்தரியாதொழிந்தகலுந் தியனேனே. 3

தாட்டவிழ் தாமரை நடந்த தத்துவனை முத்திமுதற்பொருளை யென்றும், வாட்டமிலா வளமயிலை வரதன்பால் வந்தணுகி யன்னு ளின்னுள், யீட்டமுடன் மலர்கொண்டாங் கிறைஞ்சாதே மறஞ் சாய்ந்த வகையே பேணிக், காட்டில் நிலா வெரித்ததுபோல் கண்படி விண்டிருந்தேன் கள்வனேனே. 4

பூச்சரிக்கும் பொன்னடி யெம்புங்கவனைப் புனையகலம் பொருந்து நூல்கள்,நாச்செரிக்கும் வகைதெரிந்த நாண்முதலாய் நன்மயிலை நண் ணிநானிப், பாச்சரிக்கும் வகையறிந்து பாடாதே பாவையர்தம் பய னேபார்த்துப், பேய்ச்சுரைக்கு நீரிறைத்துப் பெரிதாய பிழைசெய் தேன் பித்தனேனே. 5

பூத்தேரும் பொன்னடியெம் புங்கவனைப் பொன்னெயில் மூன் றுடையகோனை, மாத்தேருந் தளிர்மருகில் மன்னு மயிலா புரியில் நின்றமாலை, நாத்தேரு முறையதனுல் நவிலாதே நடலைவாழ்வதனை நத்தி, பேய்த்தேரை நீரென்று பின்னேக்கித் திரிந்தவா பித்த னேனே. 6

பொழிலிறைப்பூஞ் சினைப்பிண்டிப் பொன்னெயி லு ளிருந்தானை வினைகளெல்லாம், வழிப்படுத்தி வென்ருனை வளமயிலை யச்சுதனை யுன்னுமுன்னுள், பழிப்படுக்கும் பாவங்கள் பலசெய்து பரகதிக் கோர் பயனுமின்றி, வழிகிடக்கத் தூருதொரும் நுழைந்துமயக் குற்றுதவா மதியிலேனே. 7

அடல்வலையும் வெந்திறலா லனங்கனெனு மவராசை யகத்திப் பூக, மடல்வலையப் பொழில்மயிலை மரகதமா மலைதன்னை யன்னு ளின்னுள், உடல்வலைய முறப்பணிந்தங் கொண்பொருளை யோராதே பிறவியென்னுங், கடல்வளையங் கைநீந்திக் கரைகாணக் கருதினேன் கபடனேனே. 8

பொற்றலைவிற் பொலிகவர மலர்ப்பொடியை யிளந்தென்றல் புகுந்துவீச, மற்றலரு மணியணைமேல் மதிவட்டக்குடைநிழற்கீழ்

மயிலை மன்னி, சொற்றலையிற் றுன்பறுக்குந் துறவோனை யறவோனைத் தொடராமுன்னாள், புற்றலையிற் றவிடுகுத்திப் புந்தியேன் சிந்தியவாபொறியற்றேனே. 9

அமைச்சிந்தத் தருநரகத் தாழ்ந்தழுந்தி வீழாம லடைந்தோர்க்கெல்லாம். சமைந்திந்த வகத்திருந்த மடமயிலை அச்சுதனைச் சாராமுன்னா, ளமைதிண்ண முடையவர்மற் றிவரவ றென்றென்ற வரோடெழுந்துகத்தி, உமிதின்னும் பெருபயனா லுனைநினையா துலகலைந்தேனேழையேனே. 10

முற்றும்.

ஸ்ரீ

ஸ்ரீஜிநாயநம:

# திருமயிலாப்பூர் ஸ்ரீநேமிநாதசுவாமி பேரில் பதிகம்

தருமனீ தயவடிவுநீ சகலாகமஞ்சொலுஞ் சதுரனீ
யொருவனீ பலவறிவுநீ யுலகங்கள் மூன்றையுமுடையனீ
திருவுநீ ஜினநாதனீ திசையாடை மேவியசெல்வனீ
நிருபனீ திருமயிலைமேவிய நேமிநாதசுவாமியே. 1

காலன்வந்துடல் மங்கும்போது கலக்கம் வந்தணுகாமலுன்
சீலமந்திரமைந்து மென்னிடச்சிந்தை தன்னிலிறுத்துவாய்
மேலவானவர் போற்றிடும்பத்து விற் பிரமாண சரீரனே
நீலனே திருமயிலைமேவிய நேமிநாதசுவாமியே. 2

பாசதொந்தமழுந்தியே வலைபட்டமானதுபோலவே
பேசொணாதவிடும்பைகொண்டு பிறந்தநானுடல்வாடவோ
வாசமேவு மசோகநீழலின்வரதனே யடியார்கள்மேல்
நேசனே திருமயிலைமேவிய நேமிநாதசுவாமியே. 3

அலையும்வாரிதிபோல நெஞ்சனுதினமு மாசையழுந்தியே
உலையின்மேல் மெழுகாகுமெந்தனை யுறுதி முத்தியில்வைப்பையே
கொலையிலாநெறி வேந்தனே யொளிகுலவு முக்குடையாளனே
நிலையனே திருமயிலைமேவிய நேமிநாதசுவாமியே. 4

பொறியினால் வருபாவம்வந்து புகாமலானது புக்கினுஞ்
செறியும் வேதனைநரகில்வீழ்ந்து திகைத்திடாமல் விலக்குவாய்
வெறியுலாவிய வனசமாமலர்மேல் நடந்தருள்வீரனே
நெறியனே திருமயிலைமேவிய நேமிநாதசுவாமியே. 5

உனைவணங்கினர்பிறவி யொன்றிலருயரு முத்தியிலேறுவ
ரெனவறிந்து முனிருபதங்களை யேற்றிலேன் மலர்சாற்றிலேன்
வினைகடிந்தருடீரனே முழு மெய்யனே நெறியையனே
நினைவனே திருமயிலைமேவிய நேமிநாதசுவாமியே. 6

மதியிலா முழுமூடர்தம்முடன் மருவியுன்னை மறந்துயான்
புதிய தாமரையிலையி னீரதுபோலுழன்றிடவோ சொலாய்
கதிகணான்கையும் வென்றிடும்புகழ் கைவலத்திருமார்பனே
நிதியனே திருமயிலைமேவிய நேமிநாதசுவாமியே. 7

எட்டுவல்வினைவென்ற பின்னையோரெட்டு நற்குணமேவினை
தொட்டநாற்கதி விட்டனைமிகு சுகமடைந்தனை தூய்மையாற்
சிட்டர்போற்றிய தேவனே தன்மதேசிகா சிவலோகனே
நிட்டனே திருமயிலைமேவிய நேமிநாதசுவாமியே. 8

தீதிலாதபிறப்பில்வந்து ஜனித்துமுன்னிட திருவறஞ்
சாதியாம லவத்தில் நாள்பலதள்ளிடாமலெனையாளுவாய்
ஆதிதேவர நாதிதேவரென்றாரு மேத்தருகந்தனே
நீதிசேர் திருமயிலைமேவிய நேமிநாதசுவாமியே. 9

அமையுமிப்பிறவிக்கடற்குள ழுந்தியான்றிரியாமலுன்
கமலநற்பதமடைய வென்னிடர்கவலை தன்னையகற்றுவா
யிமையவர்க்கிறைதந் தளித்திடுமெந்தையே யருகந்தனே
நிமலனே திருமயிலைமேவிய நேமிநாதசுவாமியே. 10

நாடியேயுனை நம்பினேனெனை நழுவவிட்டுவிடாமலுன்
ஆடகமலர்பொற்பதந் தனையடையவே கிருபையருளுவாய்
தோடுமொன்பது மொன்பதுந் தொடராவநந்தசு கேசனே
நீடுவாழ் திருமயிலைமேவிய நேமிநாதசுவாமியே. 11

எத்தனை ஜனனம்மெடுத்தன மின்னமெத்தனைஜன்மமோ
அத்தைநானறியேனின் நற்பதமடையவே கிருபையருளுவாய்
முத்துரத்னமிழைத்து வைத்த விசித்திரமுக்குடையாளனே
நித்தனே திருமயிலைமேவிய நேமிநாதசுவாமியே. 12

தருமனே யெமைகாலபாசமறுத்துங் தயவிலாமலே
பொருதும் வெவ்வினையெட்டலைத் திடுபுங்கவாதீ தில் வேதனே
பருதிமாமதி யொளிகள் சேருனே நாடியெத்தனைப்பல்புகழ்
நிருபமா திருமயிலைமேவிய நேமிநாதசுவாமியே. 13

முற்றும்.

ஸ்ரீ ஜிநாயநம:

## திருத்தீபங்குடி தீபநாதர்பேரில் பதிகம்

ஞாலமே கொடுப்பது முடுப்பது மிலரே நாலுநூருயிரம்பரிதி, போலுமே மேனி கருணையேசொரிந்து பொழியுமே திருமுகம்புனை யாக், கோலமே கோலங் கொலைமுதலறியாக் குணங்கள் கொண்டுல கெலா மொருவர், சீலமேயென்று திகைப்பரேயாயின் ஜினவரா தீபை நாயகனே 1

ஆர்ந்தபேரன்பி னடைந்தவர்க்கருளு மடைந்திலாதவர்க்குக் கருணைத், தீர்ந்ததோர் சினமுங் திருவுளத்திலரே திருவுளத்திப்படி யிருந்துங், கூர்ந்ததோர் வெயில்வெண் கொடைவெஞ்சுரத்துக் குளிர்ந்ததோர் நிழலெனத் தம்பாற், சேர்ந்தபோ திடும்பை தீர்ப்ப ரேயாயின் ஜினவரா தீபை நாயகனே. 2

ஊர்வரேகமல முணர்வரேயுலக மொரு பொருளிருவகைத் தென்றும், நேர்வரே தமியேனிராயுதனுகி நிற்பினுந்தியானவா ளுருவி,யீர்வரே தொட ரெண் வினைப் பகை யதனை யெரிவரே யைம் பொறிக்குறும்பைச், சேர்வரே தமியேன் சிந்தையுளாகிச் ஜினவரா தீபை நாயகனே. 3

பையரா நீழ லணைவரேபாச முனிவரே துணிவுகூர்பாசங், கை யினுல்வீசிக் காலனுர்வந்தால் காலனைக்காமனுேடழித்திட், டைய கோவென்பார்க் கஞ்சலே யெனவங் தடைவரே யடைந்த தாமரை மேற், செய்யபாதங்க ளுடையரேயாயின்ஜினவரா தீபை நாயகனே. 4

துன்னெறிமனிதர் வருநெறி யிமையோர் தொடர்நெறி தொடு விலங்கலைக்கும், புன்னெறி யன்று புகுநெறி புகாது பொய் நெறி பணிப்பரே போல்வார்க், கன்னெறி போம்போ தகங்கள் பொய்த் தொடா தறங்கள்விட் டங்கிவீழுலகிற், சென்னெறிகாட்டிவிடுவரே யாயின் ஜினவரா தீபை நாயகனே. 5

செங்கணு யிரத்தோன் திருச்சிறப் பைந்துஞ் செய்யுமே திருவருளாழி, யங்கண்மூவுலகு நடக்குமேல்நிற்கு மசோகமு மமரர்துந் துபியும், பொங்குபூ மழையுங் கவரியுங் குடையும் புகன்றதோர் மணியுமூன் றெளியுஞ், சிங்கவாகனமு முடையரேயாயின் ஜினவரா தீபை நாயகனே. 6

உருவினொ டுருவென் றுரைப்பரே யுரைத்த வுலோகலோகங் களை யெல்லாம், பருவரலொழிய வொருகணத்துள்ளே பார்ப்பரே பன்றிநாய் பாம்பொத், தொருவரை யொருவர் கொன்றுதின் றடைய வுலகெலாங் கெடாவகை யுறுதித், திருவரமருளிச் செய்வரேயாயின் ஜினவரா தீபை நாயகனே. 7

பாவமா முனியே தொலைத்தது படைத்த பலபடைத்தருமமே முனைக்கட், கோபமானதுவுங் கருணையே சிறந்த கொற்றவர் பத்திலாதுணர்வே, தூபமா மலர்கொண் டொருபொழு திறைஞ்சுந் தொண்டரை விண்டொழக் குறையாத், தீபமா மென்ன வைப்பரே யாயின் ஜினவரா தீபை நாயகனே, 8

பகையிலா மயிலே படைக்கல மிலரே பலகல மழகுதம்மழகின் மிகையிலா மயிலே யணிவது மிலரே வேட்கையும் வெகுளியு முதலாய்த், தொகையிலாமயிலே சுற்றமுமிலரே தொழுதுதந் துணையடி பணியாத், திகையிலா மயிலே தலைவரேயாயின் ஜினவரா தீபை நாயகனே. 9

அத்தியைந் தென்றும் பொருள்களா றென்று மறைவரே யறைந்துவீழ் துயருற், றத்தியும் பறந்து மெழுந்துவீழ் துயரைத்தவிப்பரே தம்மையே சரண்புக், கெத்தியும் பணிந்து மிவர்ஜயங் கொண்டா ரென்னலாம்படி யவர்க்கெல்லாஞ், சித்தியின் கதவைத் திறப்பரேயாயின் ஜினவரா தீபை நாயகனே. 10

முற்றும்.

ஸ்ரீ

ஸ்ரீஜிநாயநம:

# திருத்தீபங்குடி தீபநாதர்பேரில் அஞ்சலிப்பதிகம்.

சூழ்வாய் வினைப்பந்து வந்தேறிமேயுந்துரும்பாய் நரம்பாயரும் பாவி நோயின்,பேழ்வா யிடைப்பட் டுழன்றேனும்யானும்பிழையுஞ் குச்செய்தேனன்பு குன்றுதவானோர், வாழ்வா யெனக்கே யிருகண் கொடுத்து மருந்தா யிருந்தாய் மகட்டீபமாடே, யாழ்வாய் பணக்கா வணத்தெம் பிரானே யருட்குன்றமேயென்னை யஞ்சலென்றருளே 1

மெய்யாத செல்வங்கள் செய்யென்றதற்கே வியப்புற்று வந்துற்ற வென் னுய்க ளெல்லாம், கையா வழுந்திக் கதிச் சாக ரத்தேநயப்புற்று வாழ்வதற்கு நானஞ்சியிட்டேன், மையார்பொழிற் றீபையுட்பாழிமேல்பால் மணிஜோதியே பச்சையாமேருவேயென் னையா பிரானேயராகீழலானே யருட்குன்றமேயென்னை யஞ்ச லென்றருளே. 2

கைத்தாமரைபோது கொண்டே துதித்துக் கலங்தேறிவீழ் கந்துகம்போல் மயங்கி, மைத்தார்குழற் கொம்பனார்கண்களாலே வரும் போகமாலால் வினைப்புண்டலுற்றேன், சித்தா திருத்தீபை யுட்பாழிமேல் பாற்றிசைதீபமே தேவர்சென்றேத நிற்கும் அத்தாவருட்கொண்டலே யன்பர்கோவே யருட்குன்றமேயென்னை யஞ்சலென்றருளே 3

வினையால் மிகும்பேதை மாலால் விரைந்தேன் மேலாய கண் ணோர் திறத்தே விரும்பா மனையாயமாயத்தி, னூடேபொருந்தா வருந் தாதநா ளன்றி வாளாய்க் கழிந்தேன், சினையானறும்போது குன்றுவ சோகத் திருந்தா யறஞ்சேர் செழுஞ் சோதிமேகம், அனையாய் பிரா னே யராகீழலானே யருட்குன்றமே யென்னை யஞ்சலென்றருளே. 4

பிறவாதமோகப் பெரும்பேறலைப்பற் றுறந்தார் பெருந் தூய்மை துன்னுமையாலே, யிறவாநலஞ்சேர வென்னுதநாயே னிருந்தே யலைந்தே நெடுங் கால மெல்லாம், நறவார் மலர்பிண்டி நாதா வென் வாழ்வே நஞ்சேதருந் தூய்மை நால் வேதமாலே யறவா பிரானே யராகீழலானே யருட் குன்றமே யென்னை யஞ்சலென்றருளே. 5

பற்றால்வருந்தீமை யோவாதமோகப் பரந்தாயமூடப்பெரும் பாசநாளுஞ், சுற்றானிளஞ்செந் துளக்கத் தளந்தென் துறந்தார் பெருந்தூய்மை துன்னாமையாலே, கற்றார்மனஞ்சேர் கலங்கா மனத்தாய்காமாதி கூடங் கருத்தாய தெல்லாம், அற்றாய் பிரானே யராநீழலானே யருட் குன்றமே யென்னை யஞ்சலென்றருளே. 6

பெருங்கால்வருங்குற்ற மோதாமையாலே பெரும்பாவமெல்லா மொருங்கே நெருங்கால், வருங்காலமாறொன்றி நோயா லலைந்தேன் மறந்தே யிறந்தே பிறந்தே தவழ்ந்தே, முருங்காரணப் போதின் மீதேகுவானே முழுச் சோதியே பச்சை மூவாதகோவே, யருகா பிரானேயராநீழலானேயருட்குன்றமேயென்னை யஞ்சலென்றருளே 7

மாதா பிதாவீடு மாடென்று மக்கள் மணப்பெண்டிர் சுற்ற மதோ வென்றவாவி, தாதாவெனப் புல்லர் தாமோட வோடித் தலைப்பட்டு நாளுந் தளர்ந்தெய்திடாதே, தேதாவிலஞ்சிச்செழும் போதருந்துந் திருத்தீபையுட் போறிருப் பாழிமேல்பா, லாதாரமே யாதி நாதாபிரானே யருட்குன்றமே யென்னை யஞ்சலென்றருளே. 8

தப்பாத நன்பொற் பதந்தன்னை நான்முன் தலைப்பட்டிராமற் றனித்தாழ்கதிப்புக். கிப்பாழுடற் பாரமெல்லா மெடுத்தே யிளைத் தோடி வீழுமிதற் கஞ்சியிட்டேன், முப்பான்மணிக்கோலவட்டக் குடைக்கீழ்முழுப் பச்சை மாணிக்கமே முத்திவித்தே யப்பாதிருத் தீபையுட்பாழிமேல்பாலருட்குன்றமேயென்னையஞ்சலென்றருளே 9

மாதீபையிற் சோதிவித்தாகி வானோர் வணங்குந் திருப்பாழி மேல்பால் நிலாவுஞ், ஜோதித் துளக்கற்ற முத்திப்பதத்தைத் தொண்டர்க்களிக்குந் துணைசெய்யும்பாதா, தீதார் மனைப்பாசம் விட்டுயான்மயங்கிச்சிறந்தார்நிலாவுந் திருத்தீபைமேல்பா, லாதி பிரானே யராநீழலானே யருட்குன்றமே யென்னை யஞ்சலென் றருளே. 10

முற்றும்.

ஸ்ரீ

ஸ்ரீஜிநாயநம:

# திருத்தீபங்குடி தீபநாதர்பேரில் தோத்திரப் பதிகம்.

முத்தவாணகையார் கொற்றமேகிளையார் மூடனேனிதியங் தேடியே பிறர்பின், கற்றுநாய்போலக் கதறியேயோடி கழியுநா ளொருநாள் கருதிலேனடியேன், அத்தனேயமலா கமலவாகனனே யடியரானவுரைப்படியெலா மறியச், சித்திவாசலிலே யுற்றுமேல் வருவாய் வேதநாயகனே தீபை நாயகனே. 1

இலவமொத்தமிர்தே ரிலகுபொற்றிரள்வா யெழுமணிக்குழலா ரிணைமுலைக் குருகா, வுலகுவீற்றிடுவே னினியெனைப்பெருநாளுனை நினைந்தடியே னினியெனக்கருள்வாய், அலகுமெண்குணனே யரும றைப்பொருளே யமரர்கைத்தலமே யடியவற் கெளியாய், திலதமுக் குடையாய் சிவகதிக்கரசே தேவநாயகனே தீபைநாயகனே. 2

தொய்யுலாமுலையார் பொய்யிலேயவர்கட் சூழலார் சூழலிற் சூழலே சுழலக், கையில்மா னிதியங் கடலுளே வீழக் கழியுநா ளொருநாள் கருதிடேனடியேன், வெய்யகாதிகள்போய் வேரெலா மறவே வென்றநாயகனே மன்றிலாபுனிதா, செய்யதாமரைமே லைய னேயருகா தேவநாயகனே தீபை நாயகனே. 3

தூமவார் குழலார் ஜோதிவாணகையார் தோயுமார்பமுதென் றேடியேநெடுநா, ளீமமா னதிலே யேறுநாள் குறுகிற் றென்செய் வேனடியே னெம்பிரா னருள்வாய், காமவாரிகள்மேல் வாயெலா மடியக் கண்டனுயகனே பிண்டியாயிமையோர் சேமமார் நிதியே தேடுவார் பொருளே தேவநாயகனே, 4

கரும்புபோல்மொழியா ரரும்புநேர்முலையார் காவிசேர் விழி யார் காதலாலுருகா, வருந்தினே னுனைநானறிந்திலே னடியே னஞ் சினே னடியே னெஞ்சிலே யருள்வாய், விரிந்ததா மரைமேற் சிவந்த சேவடியாய் மெய்யனே விமலா வையனே யருகா, திருந்துமூ வொளியாய்ச் சிறந்தபூ மழையாய்—தேவநாயகனே தீபை நாய கனே. 5

அன்னமென் னடையார் மின்னைநேரிடையா ரளகவாணுதலா ரருகிலே சுழலா, யின்னநாளுயிர்போ மறைவதென் றறியே னேழையே னினியான் வாழுமாரருள்வாய் மன்னுகேவலமா றுள மகிழ்ந்தவனே மாசிலாமணியே யீசனேயுலகிற், சென்னியாளுடையாயென்னையாளுடையாய்த் தேவநாயகனே தீபைநாயகனே. 6

அம்புபோல் விழியார் கொம்புபோல்வருவா ரன்னமா னடையார் மின்னைநேரிடையார், வம்புபோலினியார் தங்கள்பா லுழல்வேன் வஞ்னேனடியே னஞ்சினே னருள்வாய், உம்பர்நாயகனே யெம்பிரானருகாவொன் றுமேபலவா யொன்றுமேமொழிவாய்,செம்பொன்மூ வெயிலாய்த் திங்கள்பூ மழையாய்த் தேவநாயகனே தீபை நாயகனே. 7

பந்துசேர் விரலார் பஞ்சுபோ லடியார் பாவைமா ரவர்மேல் மோகமாய்நெடுநா, ளந்தமாநெறியே சிந்தையா லுழல்வே னப்பனே யினியா னுய்யுமாறருள்வாய், சுந்தராசுபதா சோதியேபுனிதா சுத்தனேயருகா சித்தனே நினைவேன், சிந்தையா ரமுதே யெங்கள் நாயகனே தேவ நாயகனே தீபை நாயகனே. 8

கொங்குவார் குழலார் தங்கள்வா யமுதே கொண்டுபோய்நெடு நா ளுண்டுபோ யிங்ஙனே, மங்கைமார் திறமே நன்றெனு வுழல்வேன் வஞ்சனே னடியே னஞ்சினே னருள்வாய், பொங்குசாமரையாய்த் திங்களார் குடையாய்ப் பொன்செய்மூ வெயிலாய்ப் புங்கவா புனிதா, சிங்கவாகனனே யெங்கள்நாயகனே தேவ நாயகனே தீபை நாயகனே, 9

கொல்வதே புரிந்தோர் சிறுவனைக் கொன்று கூறிடு கறியினமுதமே யுண்டு, சொல்வதேன் மற்றுஞ் சுடலையிலாடி சோர்தலையோட்டிரந் துண்டுணும் மதமே, புல்லியலஜமே யடித்தழல் வேள்வி பொருந்திய தசைதின்றேது வரறமென, செல்வனே கொல்லா வேதநற் பொருளே தேவ நாயகனே தீபைநாயகனே. 10

முற்றும்

ஸ்ரீ

ஸ்ரீஜிநாயநம:

# திருத்தீபங்குடி தீபநாதர்பேரில் நமோஸ்துப் பதிகம்

தாவாத பொருளாறு மீவாய் நமஸ்தே தனித்தாமரைப்போ தமர்ந்தாய் நமஸ்தே, யாழ்வா யெனத்துண்டி லாழ்வார் நமஸ்தே யணியாடை யணியாத வழகா நமஸ்தே, மாவாதல்களிருத லேருத லேரு மலர்த் தாமரைக்கே செலத் தாள்கை வைக்குந், தேவாதி தேவா நமஸ்தே நமஸ்தே திருத்தீபை நாதா நமஸ்தே நமஸ்தே. 1

கறங்காழி யுலகேழ் நிறைந்தாய் நமஸ்தே கடவாவுலோகங் கடந்தாய் நமஸ்தே, துறந்தார்தன்மனமீ துறைந்தாய் நமஸ்தே சோகாதி யரநீழல சோகா நமஸ்தே, வரம்பாய நாகாய வழுவாய தொழுவாய மாருத வேருக சீருத மாறித், திறம்பா நறம்பா ராம்பா நமஸ்தே திருத்தீபை நாதா நமஸ்தே நமஸ்தே. 2

ஐந்தாய பெருவேழ மெய்தாய் நமஸ்தே ஐம்மலர் காமனேயழி த்தாய் நமஸ்தே, நந்தாய பதமைந்துந் தந்தாய் நமஸ்தே நாவாரவுல கோதும் நாமா நமஸ்தே, முந்தாய கதிநாலும் வந்தாய கதிமேல் முடியாத நெடுஞான முடியாகி யடியார்ச், சிந்தா குலந்தீர வந்தாய் நமஸ்தே திருத்தீபை நாதா நமஸ்தே நமஸ்தே. 3

கருப்பள்ளி யுழலாமை கண்டாய்நமஸ்தே கண்டார்தமக்கன்பு கொண்டாய் நமஸ்தே, நெருப்பள்ளி யேற்போர்முன் னின்ருய் நமஸ் தே நின்ருர் தமக்கன்பு கொண்டாய் நமஸ்தே, சுருப்பள்ளி மது வுண்டு பண்பாடு பிண்டிச் சுகத்தா நமக்கினிது பகர்வாய் நமஸ்தே திருப்பள்ளி மலைமேல் நடந்தாய் நமஸ்தே திருத்தீபை நாதா நமஸ் தே நமஸ்தே. 4

முத்திக்கு வித்தாய் முளைத்தாய் நமஸ்தே முழுமூல வெளியாகி வந்தாய் நமஸ்தே, எத்திக்கு முளதாகி நின்ருய் நமஸ்தே எல்லா வுயிர்க்குள்ளுமுள்ளாய்நமஸ்தே பத்திப்பணுமண்டபத்தேயமர்ந்து பரமாகமர்க்கினிது பகர்வாய்நமஸ்தே, சித்திக்கு நாதா நமஸ்தே நம ஸ்தே திருத்தீபை நாதா நமஸ்தே நமஸ்தே. 5

முக்குற்ற மவையோட வென்ருய் நமஸ்தே மூவா முதலான மூர்த்தீ நமஸ்தே, எக்குற்ற மிலதாகி நின்ருய் நமஸ்தே என்னுளு மழியாத ஏகா நமஸ்தே, கைக்குற்ற மலர் தூவிப் படிமீது பணி யக் கமலத் தலர்மீது கடனுக வருவாய், திக்குற்ற திரையாழி வந் தாய் நமஸ்தே திருத்தீபை நாதா நமஸ்தே நமஸ்தே. 6

காணு வுலோகங்கள் கண்டாய் நமஸ்தே, காதீவினே வென்ற கண்ணே நமஸ்தே, நீணுகபண நீழனின்ருய் நமஸ்தே நினே வார் தமக்கன்பு புணர்வாய் நமஸ்தே, பூணுமை லழகெய்தும் புனிதா நமஸ்தே பொன்னுரு மெயில் மன்னு பொருளே நமஸ்தே, தேனூர் மலர்ப்பிண்டி யானே நமஸ்தே திருத்தீபைநாதாநமஸ்தேநமஸ்தே.7

தடந்தா மரைப்பூ நடந்தாய் நமஸ்தே தரளக் குடைமூன்றுடை யாய் நமஸ்தே, படந்தாள் பணப்பந்த னின்ருய் நமஸ்தே பகுவாயரி யாசனத்தாய் நமஸ்தே, விடந்தா னலேகின்ற விழிமாதர் முலேமேல் வீழ்கின்றவினேயேனே விடுவித்தலாகும், திடம்பாரறம்பாரறைந்தாய் நமஸ்தே திருத்தீபை நாதா நமஸ்தே நமஸதே, 8

மருவார் மலர்ப்பிண்டி மன்னு நமஸ்தே வண்டாரு மலர்மேல் நடந்தாய் நமஸ்தே, பொருமாரனேக்காய வல்லாய் நமஸ்தே பொய் யாத நன்னூல் நவின்ருய் நமஸ்தே,இருநாலு குணமாகி நின்ருய்நமஸ் தே எனேயாளு மிறைவா நமஸ்தே நமஸ்தே, திருவான வறவாழி யுடையாய் நமஸ்தே திருத்தீபை நாதா நமஸ்தே நமஸ்தே. 9

வண்டா ரசோகின்கீழ் வந்தாய் நமஸ்தே வாமா நறுங்கொண் டை வரதா நமஸ்தே, கண்டார்கணகலாத கண்ணு நமஸ்தே கமலா சனத்தின் கருத்தா நமஸ்தே, உண்டாயு மிலேயாயு முண்டில்லேயாயு முணர்வாயு முணராவின் பயனென்று மதியாத், திண்டோடு பகை தீரவந்தாய் நமஸ்தே திருத்தீபை நாதா நமஸ்தே நமஸ்தே. 10

முற்றும்

ஸ்ரீ

ஸ்ரீஜிநாயநம:

## ஆர்ப்பாக்கம் ஆதிபட்டாரகர்பேரில் பஞ்சரத்தினம்.

நீதிபுக மார்ப்பாகை தனில்வாழு நிமலனே நிறைந்தமனுநெறி வாசனே- நினைத்தவர்க்கருள் புரியும் வேதப்பிரகாசனே நிர்மலகுண சீலனே, ஜோதியொளியாகிய சுந்தரனேயடியவர் துயர்தீர்க்கும்புவி நாதனே- சொர்க்கமத்தியபாதாளலோகமும் சுடரொளியானதரனே, வேதமுடிவாகிய விண்ணவர்சகாயனே வேதாந்த நடராஜனே- விள ங்கும்வைபோகனே நாதாந்தசித்தனே, வினைதீர்க்கும் பரிசுத்தனே. ஆதியே யெளியோர்க்கு மன்புப் பிரகாசனே அமிர்த சஞ்சீவி முதலே - அண்டர்புகழ் தொண்டர்மகி ழெண்டிசையும் பேர்பெற்ற ஆதிநாதக் கடவுளே. 1

எத்தேச காலமுநின் சன்னிதி தனில்நின்றிசைஞ்சிநான் தொழுது போற்றி – எந்தனிட குறைகளைச் சொல்லி நான் முறையமிட இன்னமுந் தெரிய விலையோ, பத்தியறியாதவன்மேல் சித்தமிரங் காமலே பராமுகமாயிருந்தால் - பலநாளு மிப்படி தாமதமாகவே பாராதிருப்ப தெனமோ, சத்திய மாகவே உனையலா லெனக்கினித் தாரணியில் தெய்வ முளதோ - தாய் தந்தை குருதெய்வஞ் சகலமும் நீயென்று சாக்ஷியாய் நம்பினேன்யான், அத்தியந்தமாகவே விடாம லெனை ரக்ஷியும் ஐயனே நாத வடிவே - அண்டர் புகழ் தொண்டர் மகி ழெண்டிசையும் பேர்பெற்ற ஆதிநாதக் கடவுளே. 2

முன்செய்த விதிப்பயன் முடியா தரித்திரமும் முன்பாவமும் முன்தோஷமும் - மூவுலகு மறியாத தீராத துக்கமும் முறை தப்பி நடந்த விதமும், பின்செய்த துரோகமும் பெரியோர்கள் நிந்தையும் பொல்லாத பழி பாவமும் - பிரியாத கொலைகளுந் தெரியாமல் செய்ததும் புவியிடங் கொடாக் கொடியனுந், தன்மையுடன் வந்துமே யுன் பாதம் பூசித்துச் சரணமென் றடியில் வீழ்ந்தால் - சஞ்சலமொதுக்கியே ரக்ஷிக்கு முனையலால் தாரணியில் வேறுமுண்டோ, அன்பரிட வறுமையுஞ் சிறுமையுங் கண்பார்த்து அனுக்கிரகஞ் செய்தருளுவாய் - அண்டர் புகழ் தொண்டர் மகி ழெண்டிசையும் பேர்பெற்ற ஆதி நாதக் கடவுளே. 3

மனம்போன போக்கெலாம் வையகந்தனைசுற்றி வந்தனைசெய்துதவுவேன் - வரிசையுடன் கண்கண்ட கோவில்கள் தோறுமே மலர்தூவி சரணஞ் செய்து, இன்பமுட னென்குறையைச் சொல்லி நான் பரதவித் தெந்தனு லுரைக்க வசமோ – இடமதைக் காணும லின்பமில்லாமலென் வினையினல் சுற்றி நொந்தேன், கனமானபேர்களுட னுண்மையா யிருந்துமே கசடரைத் துணையென்றுமே-காலம் வீணுகவே திரிந்துநான் பால்போலக் களிகூர்ந்து வுனைநம்பினேன், அனைவரும் புகழ்ந்திடு மையனே யினி யென்னை யாட்கொள்ள விதுசமயமே – அண்டர்புகழ் தொண்டர் மகிழெண்டிசையும் பேர்பெற்ற ஆதி நாதக் கடவுளே. 4

திருவளர் புரியுந் தேவனே யுன்பாதந் தேடிநான் தொழவு மறியேன் - சீருடனும்மை பூசிக்கு மன்பரை சிந்தையில் நினைக்க வறியேன், மருமலர்க் கொண்டுதா னர்ச்சனைகள் செய்துனை வணங்கி நான் பணிய வறியேன் - வந்தனஞ்செய்யப் புல்லரோடிணங்கி மனுநெறித் தவறி நின்றேன், தருநிழல் போலும்மை யடுத்துநான் சரணமென் றடியில் வீழ்ந்தேன் - தயவுவைத் தென்னை யாட்கொள்ள சமயமிது நல்ல தருணம், அருளது கொடுத்து ரக்ஷியு மையா ஆர்ப்பாகை யமர்ந்த நாயகனே - அண்டர் புகழ் தொண்டர் மகி ழெண்டிசையும் பேர்பெற்ற ஆதிநாதக்கடவுளே. 5

முற்றும்.

ஸ்ரீ

ஸ்ரீ ஜிநாயநம:

## ஆர்ப்பாக்கம்

## ஆதிபட்டாரகர் பேரில் திரு இரட்டைமணி மாலை

### வெண்பா

சீர்கொண்ட செங்கமலத் தேரேறி வந்தடியே
ஞர்கொண்ட நன்னிதிக ணண்ணவரு—நீர்கொண்ட
தாயகனே யெவ்வுயிர்க்குந் தண்பொழில்சூழ் பாகையில்வாழ்
நாயகனே யாதி நாதா. 1

## கட்டளைக் கலித்துறை

நர்தா சுரர்துதி பாதா வசோகின் னறு நன்மலர்
மீதா சுதமொழி நீதா பணிந்துன்னை வேண்டிடலும்
வாதா வெனச்சொல்லு மொவ்வாதருள்புரி வாழ்ந்திடவே
போதாரும் பூவனஞ்சூழ் பாகை மேவிய புண்ணியனே. 2

## வெண்பா

புண்ணியனும் பாகையில்வாழ் புங்கவனைச் சங்கரனை
நண்ணியொளிர் முக்குடையி னுயகனை—யெண்ணியருள்
பாடி யிருமனதே பண்டைவினையுங் கலியுஞ்
சாடியிரு செல்வந் தரும். 3

## கட்டளைக் கலித்துறை.

தருமந்தனைப்புகழ் பாகையின் பிண்டிக்கண் சாற்றமலன்
திருமந்திர முன்னித் தீவினைப்போக்கத் தெரிந்துகொள்ளா
தருமந்தகால மெல்லா மூடர்வீணி னகற்றி யெதிர்
வருமந்தன்கொள வட்டிடும்பேதைமை மாய்ப்பதென்றே 4

## வெண்பா.

நன்று ரருள்புரிவ தீடேற நாயடியே
னின்று ளலாதறியே னெஞ்சினுளே—பொன்றுத
துங்கமல வென்றெளிரும் சோதியே பாகையில்வாழ்
செங்கமல நாயகனே சீர். 5

## கட்டளைக் கலித்துறை.

சீராரும் பாகையின் முக்குடை நாதனைச் சேர்ந்தவரே
பாராருஞ் செல்வமு மீகையும் வெற்றியும் பல்புகழும்
வாராரு மாமுலை வாணிதன்னேக்கமு மாசொன்றில்லாப்
பேராரு முத்தியும் பெற்றவர் மற்றவ ரற்றவரே. 6

## வெண்பா.

அற்ற வினையோ ரறவோர்சு ரேசர்பணி
நற்றவர்சொற் பாகைநகர் நண்ணுவோர்—கற்றறிந்த
பேர்க்கமுத மீந்தோர் நெஞ்சே பெருவினைக
டீர்க்கமுத நாதனையே சேர். 7

## கட்டளைக்கலித்துறை.

சேர்ந்தருந்துன்பஞ் செய்நோய்காள் புறமதிற் சென்மினின்னே
யீர்ந்துயிர் மாய்க்கும்படி யேந்திப்பெண்வலை யெய்தி முன்பின்
றேர்ந்துணராத வரைப்பணியேன் செழும் பாகையினிற்
சார்ந்துறழ் முக்குடையான் சரணங்களென் றுழ்தலைக்கே 8

## வெண்பா.

தலையார் பதம்வேண்டித் தண்பாகைப் பிண்டி
நிலையார் பதம்பணியா நெஞ்சே—அலையாரும்
முந்நீராம் வல்வினையை முந்திவரு மந்தகனை
யெந்நீரால் வேற லியம்பு. 9

## கட்டளைக்கலித்துறை.

இயம்புஞ்சு தமொழி கொண்டிலன் கேட்டில னீனமற்ற
நயம்பலவாறு செலுமாறு செல்லுங்கன் னெஞ்சன் வஞ்சன்
நயம்பெறு மன்பரைக் கூடிலனுயினு நாண்மலர்மேற்
சுயம்புவே பாகை நாயகனே செல்வந் தந்தருளே. 10

## வெண்பா.

அருளாரும் பாகையின்வா ழாதியே யன்பின்
மருளாருங் குற்றமெலாம் மாற்றித்—தெருளாரும்
மாசிலா வென்னிதய மன்னியருள் செய்பாயே
லேசில் புகழெனன் றுகு மின்று. 11

## கட்டளைக்கலித்துறை.

இன்றே யருளென விந்திர ரெண்ணிலவாய்க் கண்கொண்டு
நின்றே துதித்துப் பெறவரும் பேற்றினை நீயுமெண்ண
நன்றே யென் னெஞ்சமே பாகையின் முக்குடை நாயகன்றன்
குன்றே குணத்தன்பின் சாதுக்கடாட்டலை கொள்ளுதியே. 12

## வெண்பா.

கொள்ளார்சி னேசபதங் கூறுர் திருவறத்தை
விள்ளார் வினைத்தொடரை வீமாந்தர்—கள்ளாருங்
கற்பகப்பூத் தூவிக் கடிதிறைஞ்சும் பாகையின்வா
ழற்புதனை யாதியென்றே யாய். 13

## கட்டளைக்கலித்துறை.

ஆதியை வெவ்வினை மாற்றலரைச் செற்ற வச்சுதனைப்
போதினில் வண்டிசை பாடிய பிண்டியின் புங்கவனைச்
சீத மலர்ப் பொழிற் பாகையி னுதனைச் சிற்பரனை
நீதி நெறியை யுரைப்பானைச் சேர்கதி நேர்ந்திடவே. 14

## வெண்பா.

நேரும் வினையகலு நீங்காத வாழ்வுதருஞ்
சீருஞ் செழும்புகழுஞ் சேருமே—பாரும்
விசும்பும் பணிபாதை விண்ணவர்கோ னுதிப்
பசும்பொற் பதஞ்சார் பவர்க்கு. 15

## கட்டளைக்கலித்துறை.

பவக்கடலேறப் பணிவார்க் கருங்கலம் பல்பிணியின்
றுவக்கட லெண்ணு மவர்க்கின் மருந்து சுதமுணர்மெய்த்
தவக்கருத் தேறு மவர்க் கின்னமுதந் தண்பாகையின்வாழ்
நவக்கதிர் மாமணி முக்குடை நாயக னற்பதமே. 16

## வெண்பா.

பதம் பெறலாம் வேண்டும் பயன் பெறலாம் மேலாஞ்
சிதம்பெறலா மன்பு செழும்பாத—சிதம் பெறலாம்
பாக்கவிஞர் கொண்டாடும் பாகையின்வா ழாதீசர்
மாக்கமல பாத மதி. 17

## கட்டளைக்கலித்துறை.

மதிவாண வீரம் விஜயஞ் சந்தான மகிழ்வுதன
மதிதானியஞ் சௌபாக்கியம் போக மறிவழகு
புதிதாம் பெருமை யறங் குலநோயகல் பூண்வயது
பதினாறுபேறுந் தருவான் நற்பாகையிற் பண்ணவனே. 18

## வெண்பா.

பண்ணவனே மூவுலகமெல்லாம் பரந்துநின்ற
விண்ணவனே பாகையின்வாழ் வீரனே – புண்ணியனே
பொய்யாத மெய்யடியேன் புன்புலன்கள் சோர்ந்திடுநாள்
கையாது வந்தருள்வாய் கண்டு. 19

### கட்டளைக்கலித்துறை.

கண்டலம் பூமலர்ப் பாகையி னாதியே காரணனே
தொண்டரென்றே பக்கரென்னாளு மேத்தித் தொழுந் தெய்வமே
அண்டிய பாரீச நாதன் கவிதை கொண் டன்புடனே
தெண்டிசைப் பூமியின் மேலான செல்வமுஞ் சீரருளே. 20

முற்றும்.

ஸ்ரீ

ஸ்ரீஜிநாயநம:

## முன்மாலை தோத்திரப் பதிகம்.

விம்மாந்து வெந்நரகத்துள் வீழும்போ தஞ்சி
யம்மாவோ வென்றழுதா லாரொருவர் நோக்குவார்
எம்மானு மீரடியு மல்லாவிங் கென்கண்டாய்
செம்மா மலர்ப்பிண்டித் தேவர் பெருமானே. 1

காத்தானை வெந்நரகஞ் சாராமற் காமாதி
நீத்தானை யென்மனத்தே நின்று நிலாவானைப்
பூத்தாம முக்குடைக்கீழ்ப் புங்கவனை நாடோறு
மேத்தாத நாவெல்லா மிறந்தநா வல்லவோ. 2

கொல்லாத நல்விரதங் காத்துல குய்யக்கொள்ள
வல்லானை வண்டுறையும் பிண்டிக்கீழ் மாதவனை
நல்லானை நான்முகனை நாதனை நாடோறுஞ்
சொல்லாத நாவெல்லாஞ் சோர்ந்தநா வல்லவோ. 3

எண்ணிலாப் பல்விலங்கு மாகித் தடுமாறி
யுண்ணிலாய் நின்றாங் குயர்பிண்டிக் கீழமர்ந்த
வண்ணருள் சேர்ந்தங் கருட்கடலை யானேந்தப்
பண்ணினேன் வானோர் பணியொன் றுடையேனே. 4

கொங்கோதை வண்டுறையும் பிண்டிக்கீழ் கொண்டமரர்
தங்கோல நீண்முடிசாய்த் தேத்தத் தகுவோனைச்
செங்கோலால் மூவுலகுஞ் செயங்கொண்ட சுருதத்தானை
எங்கோனை யேத்தானா ளென்கண் டுயிலாவே. 5

வீடாந் திறமும் வினையும் வினைப்பயனு
மோடாத் தடுமாற்றத் துட்பொருளைச் சொன்னானை
வாடா மலர்ப்பிண்டி வாமனை நாடோறும்
பாடாத நாவெல்லாம் பாவநா வல்லவோ. 6

நாற்கதியுட் சேற்றுளழுந்தித் தடுமாறிக்
காற்புதைத்துக் கொள்வோனைக் கண்டிரங்கிக் கைதந்து
மேற்கதிக்குச் செல்மருந்து மூன்று மிவைதந்த
கோற்கடிமைப் பட்டேன் குறையொன் றுடையேனோ. 7

எப்பிறப்புக் கொண்டு மிகழாதுன் சேவடிக்கே
யப்பிறப்புக் கப்பிறப்பா யாளாய் வழிபடுவேன்
தற்பிறப்பு நீயெனக்குத் தந்தருளுங் கீர்த்தியே
யெப்பிறப்பு மில்லாத வெந்தை பெருமானே. 8

கேளிலா யாவர்க்குங் கேடின்றுங் காலத்தே
நீளிலாப் பல்விலங்கு மாகித் தடுமாறித்
தாளிணை னீண்ட தடமுக் குடையார்க்கிங்
காளலாற் கைமாறி யாது மறியேனே. 9

பண்டரற்றுந் தீநெறிக்கே சென்று பலகாலுங்
கொண்டரற்று கின்றேனின் கோடாத வாய்மொழியை
கண்டரற்று கின்றேனைக் கைவிடுப்பார் யார்கொலோ
வண்டரற்றும் பிண்டி வானோர் பெருமானே. 10

விம்மாந்து காத்துக் கொல்லாவிரத மென்றெண்ணிச்
செம்மாந்த கொங்கையார் வீடார்ந்த நாற்கதிசேர்ந்
தெம்மாவோ வெப்பிறப்புக் கேளிர்பிறர் கண்டிரங்க
வம்மா பிறந்திருந்தே னுளுமா ருளாயே. 11

முற்றும்

ஸ்ரீ

ஸ்ரீஜிநாயநம:

# பின்மாலை தோத்திரப் பதிகம்.

திருவில்வீதி யொளிதிகழுஞ் செம்பொனியில் மூன்றுடையானை
மருவிவண்டார் மலர்தூவி வானோரேத்தப் படுவோனைப்
பரவிவையம்பணிந்தேத்தப் பைம்பூம்பிண்டி நிழலானைப்
பொருவில்கமல மலரேத்தப் புலராய்வாழி பொழுதே நீ 1

மின்னார்முத்து மணிமாலை மிளிருங்குடைமூன் றுடையானைப்
பன்னாளமரர் துதிசெய்து பரவியேத்தப் படுவோனை
யன்னாளுலகத் தவர்க்கெல்லா மருளைப்பகர்ந்த வெம்மானைப்
பொன்னார்மலர் கொண்டர்ச்சிக்கப் புலராய்வாழி பொழுதே நீ. 2

கொலையும் பொய்யும் கடிந்தவனைக் கோலமதிமுக் குடையானை
யிலைகொண்மகரத் தோரணஞ்சே ரெழிலார்பிண்டி நிழலானைக்
கலையும்வளையு முடையார்மேற் காதலார்வங் கடிந்தானைப்
புலையில்கமல மலரேத்தப் புலராய்வாழி பொழுதே நீ. 3

ஆதியந்த மிலாதானை யலர்பொன்மாரி யமர்ந்தானை
வேதநான்கும் விதித்தானை விண்ணோர்தங்கள் பெருமானைக்
காதிநான்கும் கடிந்தானைக் கடையில்ஞானக் கடவுடனைப்
போதுசாந்த மர்ச்சிக்கப் புலராய்வாழி பொழுதே நீ. 4

மரவமவ்வன் மணிநெய்தன் மதுவார்க்கழுநீர் மல்லிகையுங்
குரவங்கொங்குங் கொடிமுல்லை கொண்டுவானோர் குழுநின்று
இரவும்பகலும் தொழுதேத்த வெழிலாரெயில்மூன் றுடையானை
பொருவில்மலர்கொண் டர்ச்சிக்கப் புலராய்வாழி பொழுதே நீ. 5

தாதார்மலர்மே னடந்தானைத் தடஞ்சூழிஞ்சி நகரானைத்
தேதாவெனவண் டிசைபாடுஞ் செழுந்தண்பிண்டி நிழலானைக்
காதார்குழைகள் வெயில் வீசக் கனகப்பொற்றோட் கலந்திலங்கப்
போதார்மலர்கொண் டர்ச்சிக்கப் புலராய்வாழி பொழுதே நீ. 6

மன்னுமலர்மேல் நடந்தானை மகரவைரத் தோரணஞ்சேர்
கன்னிமதின் மூன்றுடையானைக் கருணைசுரந்த பெம்மானை

மின்னும்மதிபோன் முக்குடைக்கீழ் விளங்குஞ்ஞானச்
செழுஞ்சுடரைப்
பொன்னின் மலர்கொண் டர்ச்சிக்கப் புலராய்வாழி பொழுதே நீ, 7

காற்றினின்ற கறங்கேபோற் கலங்கியுழலுங் கதிகடொறுங்
கூற்றன்வந்து குறுகாமற் கொள்ளுங்கருணைப் பெருங்கடலை
யேற்றுஞ்சிங்கா தனத்திருந்த விறைவன்றன்னை யெப்பொழுதும்
போற்றிமலர் கொண் டர்ச்சிக்கப் புலராய்வாழி பொழுதே நீ 8

அங்கப்பூவ முதலாய வகிலஞானம் பலபொருண்மேற்
பங்கமேழு முடன்பயந்த பரமயோகி பரமேட்டி
தங்கவண்ண னடிநீழற்கீழ் தாதார்புன்னை மலரணிந்து
பொங்கும் புனலாலர்ச்சிக்கப் புலராய்வாழி பொழுதே நீ 9

கோலமதிமுக் குடையானைக் குளிர்கொள் பிண்டிநிழலானை
ஞாலமடைய வுடையானை நமர்கள் பிறரென்றில்லானைச்
சீலமிகுபொன் னெயிலானை செழும்பொற்பாத மலரடியைப்
போதுமலர்கொண் டர்ச்சிக்கப் புலராய்வாழி பொழுதே நீ 10

திருவில்மின்னுர் கொலைபொய்யுஞ் சேராராதி யந்தமிலார்
மருவுமரவந் தாதார மன்னும்மலர்மேல் நடந்தானைப்
பொருவில்காற்றில் நின்றிலங்கப் பொங்குபூவ மங்கமுட
னருளுங்கோல மணியார்தாள் அணியவிடியாய்ப் பொழுதே நீ 11

முற்றும்.

ஸ்ரீ

ஸ்ரீஜிநாயநம:

## நவபஞ்சரூப நமோஸ்துப் பதிகம்

மானச் செயத்தம்ப மாலே நமஸ்தே மலர்க் காமனைச் செற்ற மன்ன நமஸ்தே, மோனத் தவத்தா றுளத்தாய் நமஸ்தே முக்குற்ற மில்லாத முனியே நமஸ்தே, தேனைக் கொலைக்கொப்ப வென்றாய் நமஸ்தே திரு ஞாலத்தையுஞ் சொன்ன செல்வா நமஸ்தே, ஞானக் கொழுந்தாகி நின்றாய் நமஸ்தே நவபஞ்சரூபா நமஸ்தே நமஸ்தே 1

மாலாகி யரனுகி யயனுகி யொன்ருய் வடிவாகி முடிவாகி வள வாய் நமஸ்தே, மூலாக மாகால கோபா நமஸ்தே முனிவர்க்கு முன்ஞன முனிவா நமஸ்தே, மேலாகி வருதன்ம சக்ரா யுதத்தாய் வினைச் சத்துரு வைச்செற்ற வீரா நமஸ்தே, நாலான கதி வென்ற நாதா நமஸ்தே நவ பஞ்ச ரூபா நமஸ்தே நமஸ்தே. 2

எந்தா யெனக் கன்பு தந்தாய் நமஸ்தே யிறப்புப் பிறப் பென்ப தில்லாய் நமஸ்தே, முந்தாய கன்ம க்ஷயத்தாய் நமஸ்தே முடிவற்ற தொரு மூல முதலே நமஸ்தே, செந்தா மரைத் தேரில் வந்தாய் நமஸ்தே ஜெயங் கொண்டவன் சிந்தை சேர்வாய் நமஸ்தே, நந்தா விளக்கென்னு ஞானீ நமஸ்தே நவபஞ்சரூபா நமஸ்தே நமஸ்தே. 3

சேலாறு கண்ணுர் மயக்கத்தை வெளியிட்டுச் சிலுகுக்கு ளாகாத செல்வா நமஸ்தே, மேலோரு மனேவோருந் துதிகூடி புகழ்பாடும் விமலா விநோதா சுபோதா நமஸ்தே, பாலாறு போலாறு பொருள் வந்து பெருகப் பரமாகமஞ் சொன்ன பரமா நமஸ்தே, நாலாறு நாமம் படைத்தாய் நமஸ்தே நவ பஞ்ச ரூபா நமஸ்தே நமஸ்தே. 4

வில் வாளி வேல் சக்ர மில்லாமல் வினைவென்று மேலான வுல காளும் வீராநமஸ்தே, கொல்லாத விரதங்கள் கொண்டார் மனத்தே குறிகொண் டிருக்குங் குணத்தாய் நமஸ்தே, கல்லான கல்லார்கள் காணுத பாதக் கருணுகரா காம கோபா நமஸ்தே, நல்லாகமஞ் சொல்ல வல்லாய் நமஸ்தே நவ பஞ்ச ரூபா நமஸ்தே நமஸ்தே. 5

மாகத்தின் மேலான லோகா நமஸ்தே மதிசக்ர நிழலான பத்திரா நமஸ்தே, மோகத்துடன் காம மில்லாய் நமஸ்தே முனிவர்க்கு மனேவர்க்கு முதல்வா நமஸ்தே, போகத்தை நத்தும் இனத்தார் வணக்கங்கள் பொல்லா தெனச் சொன்ன புனிதா நமஸ்தே, நாகப்பணு மண்ட லத்தாய் நமஸ்தே நவ பஞ்ச ரூபா நமஸ்தே நமஸ்தே. 6

அச்சப்படக் காலன் வரு நாளி லடியா ரஞ்சாமல் வந்தஞ்ச லென்பாய் நமஸ்தே, வச்சிரக் கரதத்தன் திரிலோக பிரபுபாட மட வார்கள் நடமாட வாழ்வாய் நமஸ்தே, பச்சைப் பதங்கொண்ட லொப்பாய் நமஸ்தே பரந்தாமனே பாப நாசா நமஸ்தே, நச்சுப் பணக்காவணத்தாய் நமஸ்தே நவ பஞ்ச ரூபா நமஸ்தே நமஸ்தே. 7

சோமோ தயத்தொத்த முச்சத்ர நீழற் சுகரத்ன த்ரையஞ் சொன்னசுகிர்தா நமஸ்தே, மாமோகி னீயம்அறுத்தாய் நமஸ்தே

வளர் ஜோதிவடிவான வடிவே நமஸ்தே, தாமோ தரா வீத ராகா நமஸ்தே சந்தாப மில்லாத தத்வா நமஸ்தே, நாமோதரா நீழ லானுய் நமஸ்தே நவ பஞ்ச ரூபா நமஸ்தே நமஸ்தே. 8

திருமாதை வலமாக வைத்தாய் நமஸ்தே, த்ரய சத்ர விறலாத பத்திரா நமஸ்தே, முருகாரெழிற் பிண்டி நிழலாய் நமஸ்தே, மூவாப் பதங் கொண்ட மூர்த்தி நமஸ்தே, சுரபாலர் மானுக லோகாபிஷேகத்தர் ஜோதிஷ்கர் துதிகொண்ட சுத்தா நமஸ்தே, நரபாலர் பணியோது நாதா நமஸ்தே, நவபஞ்ச ரூபா நமஸ்தே நமஸ்தே. 9

கற்றூர் மனத்துத் தியானத்தினுள்ளே கலந்தேயிருக்குங் கருத்தே நமஸ்தே, சுற்றுடை யணியாத ஜோதி நமஸ்தே, துன்பற்ற முத்திச் சுகத்தாய் நமஸ்தே முற்று விளங் கொங்கை மடவாரை யடையாத முழுஞான வொளியான முடிவே நமஸ்தே, நற்றூர் மனத்தேரிலுற்றுய் நமஸ்தே, நவபஞ்ச ரூபா நமஸ்தே நமஸ்தே. 10

முற்றும்.

ஸ்ரீ

ஸ்ரீஜிநாயநம:

## பாரீஸ்வநாதர் பேரில் சரணப் பதிகம்.

அச்சுதா வமலா வருகா சரணம் அருந்தவக் கடலே யறிவா சரணம், இச்சித்தவர் மனத்திருப்பாய் சரணம், எழிலார் மதின் மூன்றுடையாய் சரணம் நச்சரவணை நிழலானே சரணம் நவைபல நீக்கிய நாதா சரணம், பச்சைமலை மாதவனே சரணம் பாரீச நாதா சரணம் சரணம். 1

கொங்கலர் பிண்டிவாமா சரணம் குலவிய சிங்க வணையாய் சரணம், திங்களனையமுக் குடையாய் சரணம் திருந்திய வெழில் சாமரையாய் சரணம். பொங்கிய தோர்துந் துபியாய் சரணம் பூமலர் மாரிமண் டலத்தாய் சரணம், பங்கயமலர்மேல் வருவாய் சரணம் பாரீசநாதா சரணம் சரணம். 2

தண்ணமை கமலவாகா சரணம் தருமாதவனே தலைவா சரணம், விண்ணுலகோர் தொழவருவாய் சரணம் வீரியவமலா விமலா சரணம், புண்ணியவாகா புனிதா சரணம் பூணணி புனையாதவனே சரணம். பண்ணவனே முதற்பரமா சரணம் பாரீசநாதா சரணம் சரணம். 3

கன்னவிற் காமனைக் கடிந்தாய் சரணம் கதி நான்கினையுங் கடந் தாய் சரணம், மண்ணிய நற்குணவாமா சரணம் மாதவவரதா மாலே சரணம், பொன்னெயில் வட்டப் பொருளே சரணம் போதி நாதா பூரண சரணம், பன்னிரு கணந்தொழ வருவாய் சரணம் பாரீசநாதா சரணம் சரணம். 4

இதமே யெவர்க்கு முரைப்பாய் சரணம் இமையவரே தொழ வருவாய் சரணம், கதமும் மதமும் கடிந்தாய் சரணம் கமலத்தின் மீது நடந்தாய் சரணம், ததியைம்பொறியைத் தவிர்ந்தாய் சரணம் தரணியிற் றரும முரைத்தாய் சரணம். பதுமைபரனே பரமா சரணம் பாரீசநாதா சரணம் சரணம். 5

விஞ்சலர் பிண்டி விமலா சரணம் மிகவுலகோர் தொழவருவாய் சரணம், கஞ்சத்தலரில் வருவாய் சரணம் கருணாகரனே கமலா சரணம், நெஞ்சத்தவர்கள் நினைவே சரணம் நித்தா நிமலா வமலா சரணம், பஞ்சகரத்தைப் பதித்தாய் சரணம் பாரீசநாதா சரணம் சரணம். 6

முருகாரசோகநிழலாய் சரணம் முனிக்கணமேத்து முனிவா சரணம், பெருமாதவங்கள் புரிந்தாய் சரணம் பேராயிரத்தெட்டுடை யாய் சரணம். பொருமாரனைப் போர்தவிர்த்தாய் சரணம் பொன்னெ யில் மன்னிய புங்கவ சரணம். பரிமா கமல பதத்தாய் சரணம் பாரீச நாதா சரணம் சரணம். 7

அத்தனே யென்னை யாளீர் சரணம் ஆதிபகவா வருளே சரணம் முத்தனே முவ்வுல களந்தாய் சரணம் முத்தியை யளிக்கும் முதல்வா சரணம், சித்தனே பத்தர்கள் செல்வா சரணம் தேவாதிபனே தேவா சரணம், பத்தர்களே தொழவருவாய் சரணம் பாரீச நாதா சரணம் சரணம். 8

அரமென வெண்வினை யரிந்தாய் சரணம் அரவின் நிழலி னமர்ந்தாய் சரணம், தாமெனுஞ் சதுர்க்கதி தவிர்ந்தாய் சரணம்

தயவே மிகவு முடையாய் சரணம், விரகக்காமனே வென்ருய் சரணம் வேதமோர் நான்கும் விதித்தாய் சரணம், பரமாகமங்கள் பகர்ந்தாய் சரணம் பாரீச நாதா சரணம் சரணம். 9

அடியார் மனதிலமர்ந்தாய் சரணம் அணியாடை யணியா தழகா சரணம், கொடிசேர் மதிற்கோபுரத்தாய் சரணம் கொல்லாவத மீந்த கோவே சரணம், கடிமாமலர்மேல் கருத்தே சரணம் காமாதி வினை வென்ற கருணு சரணம், படியேழுலகும் பகர்ந்தாய் சரணம் பாரீச நாதா சரணம் சரணம். 10

மஞ்சாரும் பிண்டிக்கீழ் வாமா சரணம் மாமுனி போற்றிடும் வரதா சரணம், எஞ்சா மதிக்குடை யெழிலாய் சரணம் எனையாளுமீசா யிறைவா சரணம், நஞ்சார் பணிநிழல் நாதாசரணம் நளின மலர்த்தேர் நான்முகா சரணம், பஞ்சாக்ஷரமீந்த பரனே சரணம் பாரீச நாதா சரணம் சரணம். 11

முற்றும்.

---

ஸ்ரீ

ஸ்ரீஜிநாயநம :

## சரணப் பத்தும் பதிகம்

முத்தொளிமுக்குடையாய் மூவுலகாளுடையா
யுத்தமனே யருகா வுன்பதமே சரணந்
தத்துவனே யெனையாள் சங்கரனே வினையைக்
கொத்தற வென்றவனே கொற்றவனே சரணம். 1

ஆதிபனே யமலா வச்சுதனே யருகா
ஜோதிகொள் மூவெயிலாய் சுந்தரனே சரணம்
வேதியனே யமலா விண்ணவனே விமலா
தாதணி பிண்டிநிழற் சங்கரனே சரணம். 2

சூரியர் கோடியுடன் சூழ்வளர் போலொளியாய்
வீரியனே யஜிதா வித்தகனே சரணம்

ஆரியனே யசலா வங்கணனே யருகா
நாரியுடன் புணரா நல்லவனே சரணம். 3

பண்ணவனே பரமா பற்றற்ற மாதவர்தங்
கண்ணவனே சரணங் கற்றவனே சரணம்
விண்ணவனே முனிவா வித்தகனே யடியேன்
எண்ணவனே சுமதி யெம்பெருமான் சரணம். 4

சாரணனே தலைவா சந்திர மண்டலனே
நாரணனே யரனே நான்முகனே சரணம்
பூரணனே புனிதா புண்ணியனே யருளின்
காரணனே சரணம் கற்பகனே சரணம், 5

தூயகனுவி னலஞ்சொல்லுநர் போற் சமயப்
பேயர்கனுவி லெனைப் பித்தவனே சரணம்
தாயருபோ லிருதா டந்தெனை யாளுடையாய்
நாயக தீபையில்வாழ் நான்முகனே சரணம். 6

நற்றவனே வரதா நான்மறையாய் வினையைச்
செற்றவனே திலதா சீதளனே சரணம்
கொற்றவனே குணவக் குன்றவனே சரணம்
கற்றவனே முழுதுங் கண்டவனே சரணம். 7

மந்தரமா மலைமேல் வானவர் வந்துதொழ
சுந்தர மாமலையே சுவ்விதனே சரணம்
தந்தையர் தாயரெனத் தந்தருளின் னமுதைச்
சிந்தை செய்தாய் சரணம் தீபை யுளாய் சரணம், 8

அங்கணனே யபயா வம்புய வாகனனே
புங்கவனே பதுமா பொன்னெயிலாய் சரணம்
சங்கரனே தலைவா சம்பவனே தருமா
கொங்கலர் பிண்டிநிழற் குணதரனே சரணம், 9

ஆதிமுதற் பரதற் கன்றுவிசும் பரசன்
சேதியமின்று நல்கச் சிந்தை செய்தாய் சரணம்
கோதில் குணக்கடலே கொற்றவனே தீபை
நாதமனத் துறையும் நாயகனே சரணம். 10

முற்றும்.

ஸ்ரீ

ஸ்ரீஜிநாயநம :

# மந்திரப் பத்தும் பதிகம்.

---

பெருகுநாண் மதிபோல் நிலவு முக்குடையாய் பிழைபடா நெறியாய் பிறவிவேர்க் குறவாய், முருகுலா மலர்மேல் வருதிகம்பரனே முடிவிலா முடிவே முனிவுதீர் முனியே, பருகுபாலெனவே யினியவாய் மொழிவாய் பரவுவாருறவே பரமமென்பரனே, அருகனே யடியே னபயமென்பதுகா ணழிய வந்திடுநாள் மொழியுமந்திரமே. 1

முத்தனே யத்தியோ ரைங்தெனப்புகல்வாய் மூவகைப்பகையும் போகவென்றவனே, புத்தனே புனிதா போதிவானவனே பொங்கு சாமரையாய் புங்கவர் பொருளே, சித்தனே சிவனே திசைமுகத் தவனே தேடுவார் தனமே தீபை நாயகனே, அத்தனேயடியே னபய மென்பதுகா ணழிய வந்திடுநாள் மொழியுமந்திரமே. 2

புண்ணியா ஜினனே பொன்னெயிற் கிறைவா பூரண பகவா புஷ்ப வாகனனே, பண்ணவாமயிலா புரியுளா யயன்வாழ் பஞ்ச பாதகர்தம் பகையைவென் றவனே, விண்ணவா வறிவாகுறைவிலா நிறைவா வித்தகா சுந்தரா முத்தி நாயகனே அண்ணலேயடியே னபயமென்பதுகா ணழிய வந்திடுநாள் மொழியுமந்திரமே. 3

கச்சுலாமுலையா ரமுதவாயுதவுங் கன்னலார் மொழியார் மின்னுலா மிடையார், மைச்சுலா விழியார் வீடுபட்டுழையா மைந்தனே மதவே ளஞ்சவென் றவனே, நச்சரா நிழலாய் பச்சைமா மலையே நாதனே பழிதீர் வேதநாயகனே, அச்சுதா வடியே னபயமென்பதுகா ணழிய வந்திடுநாள் மொழியுமந்திரமே. 4

துறவனே பதினெண் பாஷையாய் விரியுந் துய்யதோர் மொழியாய் சுந்தரா தொழுவார், உறவனே யொளியே ஜினவரா வினைதீரொருவனே திருமார் புறையு மாலுடையா, யிறைவனே ஜனகா புரிவிடா துறைவா யெங்கணுயகனே யென்னையாளுடையாய், அறவ்னே யடியேன பயமென்பது காணழியவந்திடு நாள் மொழியுமந்திரமே. 5

செய்யதாமரைமே லமரர்தாள்பணியத் தேருலா வருவாய் சிவ கதிக்கரசே, வெய்ய தீவினையின் றொகையெலா மழிந்து வீழவெ ன்றவனே விடுசேர் மொழியாய், பையரா நிழலாய் சாரணர்க்கிறை யே பாபநாசனனே பங்கயத் துறைவாய், ஐயனே யடியே னபயமெ ன்பதுகா ணழிய வந்திடுநாள் மொழியு மந்திரமே. 6

ஜோதியார் மலராய் பிண்டி நீழலின்வாழ் தொண்டர்தந் துணை யே சூழ்புறக்குடியா, யோதியாய் மறையின் றுலகெலா முணர்வா யுண்டுமில்லையுமென் றுரைசெயும் பெரியோய், வேதியா தருமசக்கரா விகிர்தா வெங்கொலை பழுதில் சிங்கவாகனனே, யாதியே யடியே னபயமென்பதுகா ணழிய வந்திடுநாள் மொழியு மந்திரமே. 7

செப்பருமுன துநற் குணமோரெட்டுந் திகழ்தரும்பெயர்தா னுயி ரத்தெட்டுந், தப்பிலாதவனே யென்றுமேழ் பதிக்குந் தலைமையாயு டையாய் தருமசாரணனே, ஒப்பிலாமணியே பொருள்களா றிவை யென் றுரைசெய்தாரிமையோர் விரைகொள்பூ மழையாய், ஐயனே யடியே னபயமென்பதுகா ணழியவந்திடுநாள் மொழியு மந்திரமே. 8

விரையார்கமலத் தேரின்மேல்வருவாய் மின்னிலங் கொளி சேர் வலையமார்விமலா, வாரிவாய் வருவா யமுதனைமந் துடையாய் மறுவிலாயற வாழி யந்தணனே, சூரியர் மதிபோற் றண்ணளிக் கடலே சுடருமூ வொளியாய் சுருதிமூன் றுடையாய், யாரியாவடியே னபயமென்பதுகா ணழிய வந்திடுநாள் மொழியு மந்திரமே 9

அற்புதமாமென் றஜமடித்தழலினந்தணர் கூடிமந்திரமோதி தர்ப்பைகளிட்டுத் தசைதனைத்தின் னுந் தயவிலா வேதமல வென மொழிவாய், புட்பவாகனனே பொன்னெயிற் கிறைவா பூரண பொரு ளே போதிமாமணியே, யற்புதா யடியே னபயமென்பதுகா ணழிய வந்திடுநாள் மொழியு மந்திரமே. 10

முற்றும்.

ஸ்ரீ

ஸ்ரீஜிநாயநம:

# நமோ அரஹந்தாணப் பதிகம்.

பூவில் வந்தவன் புந்தியிற் புங்கவன்
மேவி யென்றும் விரும்பி யிருத்தலா
லாவி சென்றறிவே யிழந் தாலுமென்
நாவி யம்பு நமோரஹந் தாணமே. 1

வானி ரைத்திடி வந்துடன் வீழினுந்
தானு ரைக்க வனும்மதி சாரினும்
ஊனி டம்புலி வேழமெ திர்ப்பினும்
நானு ரைக்க நமோரஹந் தாணமே. 2

ஊன மாகிய லோபகு ரோதமும்
மானம் வீறுமெய் மாயையு மாற்றிடுந்
தான மோடு தவமொழுக் கந்தரும்
ஞான நல்கு நமோரஹந் தாணமே. 3

ஓத நாளு முருவினை தீர்த்திடுஞ்
சேதி னுட்டிநற் சிந்தையை நல்கிடுங்
காதி நான்மை க்கடிந்த நனிமலர்
நாத னுத நமோரஹரந் தாணமே. 4

எண்ணி வைக்கு மிருவினை மாசற
பண்ணி வைக்கும் பரமபதத்தையும்
மண்ணின் வைத்திடும் வானுல காளவும்
நண்ணி வைக்கு நமோரஹந் தாணமே. 5

கோட்டி வைத்த கொடுவினை யெட்டையு
மீட்டி விட்டிடும் வீட்டு நெறியையுங்
காட்டி வைத்திடுங் கைவல நான்மையும்
நாட்டி நிற்கு நமோரஹந் தாணமே. 6

மாடு மக்களு மற்றுள்ள சுற்றமும்
வீடு விட்டுமெய் மேனியும் விட்டுநா
மோடிப் போம்பொழு தொத்துடன் போமது
நாடி நிற்கு நமோரஹந் தாணமே, 7

வன்மை நீக்கி வினையை மறித்திடும்
தன்மை யாக்கித் தரணி யெல்லாந் தரும்
புன்மை நீக்கிப் புகுதவல் லார்க்கெலாம்
நன்மை யாக்கு நமோரஹந் தாணமே. 8

சொன் மருந்து சுதமொழிக் கேளுமின்
நன் மருந்து நற்கம லக்கழல்
புன் மருந்து புகுதவல் லார்க்கெலாம்
நன் மருந்து நமோரஹந் தாணமே. 9

பூவுக் கருங்கலம் பொங்கு செந்தாமரை
தேவர்க் கருங்கலந் திங்கண் முக்குடை
பாவுக் கருங்கலம் பஞ்ச மந்திரம்
நாவுக் கருங்கலம் நமோரஹந் தாணமே. 10

அல்கு விக்கு மருவினை தன்னையும்
பல்கு விக்கும் பரம பதத்தையும்
புல்கு விக்கும் புகரறு காக்ஷியும்
நல்கு விக்கு நமோரஹந் தாணமே. 11

பூவி லூனமில் வானுரை யோதபூ
மேவு மாட மருதுதி யென்றுசொல்
பாவில் வண்மைகோட் டல்கு புவிக்கியல்
நாவி லோது நமோரஹந் தாணமே. 12

முற்றும்

ஸ்ரீ

ஸ்ரீஜிநாயநம:

# சமாதி பத்தும் பதிகம்.

பூமலர் மாரிபொழிந் தாதரவாலிமையோர் புங்கவனே புனிதா வென்று புகழ்ந்துதொழத், தேமலர் தாமரைமே லேறியுலா வருவார் திருவறமல்லதுவே ரெருபொருளுங் கருதேன், மாமலர்வார் தளிர்போன் மேனி கொள்வாணுதலார் வஞ்சனைவாள் விழிபோல் வன்கொலைசூழ் நமனு, ராமிதுகாலமென மூவடிவிற் படைகொண் டஞ்சவரும் பிறவிக் கஞ்சுவனே யினியான். 1

முக்குடை நீழல் மணிச் சாமரை வீசவுடன் மூவுலகும் பரவத் தீவினைபோயகலத், திக்குடை யாடை யுடன் ருமரைமேல் வருவார் திருவறமல்லதுவே ரெருபொருளுங் கருதேன், விக்கலெழுந்தன பற் கிட்டியேகால் குளிரும் மீளவிடாருயிரைப் போயழையீர்கடுக, வக்கணமே பலருங் கட்டி யெடுத்தொருகா லழுதுவிடும் பிறவிக் கஞ்சுவனே யினியான், 2

தருமமிதென்பதுவுஞ் சமயமிதென்பதுவுந் தவமிதுவே யிவனே தலைவனெனும் படியும், பொருண்மெயிதென்பதுவுந் தெளியவறிந்தவமே போயுழல்வாரொடு தான்சேர்வருடன் புணரே, னிருமிவளைந்தனகா ணடையு மசைந்தனபோ யிளமை கழிந்தனரே யினியிவரென் றிளையா, ருகு முடங்குவதுந் தவிரவுடம்புதிரைந் தன்புவிடும் பிறவிக் கஞ்சுவனே யினியான், 3

தேனைவிடுங்கொலையும் பொய்யைவிடுங் களவுஞ் செய்பொருளுந் தவிருந் தெளிய விருந்திருளுண், டூனமுனிந்தறவோர் கேண்மை நினைந்திடுமென் றுறுதி மொழிந்தவர்தாள் சிறிது மறந்தறியேன், வானிலெழுந்துழலா மண்ணில் விழுந்தசையா மானரகிற் கிளையா மாயவிலங்கினமா, வானவினை தளையோ டோடியலைத்து விடா வாசையறும் பிறவிக் கஞ்சுவனே யினியான். 4

தொல்லறவேடமுட னெல்லையிலா விரதத் தொழில் புரிமாதவர் தாள் தொழுமவர் சொன்னதுகொண், டில்லறமே துணையென் றெல்வது கைகரவா வினியதுசெய்வதலால் முனிவதுசெய்தறியேன் பல்லுவிழுந்தனதன் சொல்லுநடுங்கிவரும் பஞ்சுபடர்ந்தது கண்

பக்குவமே யிதுவென், றல்லலெனும்படியாய் நல்லரெனும்படிபோ
யடைவுவிடும் பிறவிக் கஞ்சுவனே யினியான், 5

தாயர் பயந்ததுவுந் தந்தையர்நீடு தனந் தங்கிளை மக்களுயிர் தா
ரமெனப் பிறவும், மாயமெனும் படிகண் டாய்பொருளாகமநூல்
மன்னுயிரேமுறவே சொன்னவர்தாள் மறவேன், சேயுயிர்மாமலை
மேல் மாரிபொழிந்ததுவீழ் சிந்தருவித்துளிபோல் வந்துதொடர்ச்சி
விடா, வாயிர கோடிவிதத் தூழ்வினையால்வருநே யனுபவிக்கும்
பிறவிக் கஞ்சுவனே யினியான். 6

மேவியதீவினைபோய் மீளவும் ஞாலமெலாம் வேதனைதீரவு
மேல் வீடுலகம் பெறவும், வாவிகொண்மாமலர்மே லேறியுலாவரு
வார் மந்திர மைந்தையுமென் சிந்தையுளே யுடையேன், தேவியருங்
கிளையுஞ் சுற்றமிருந்தழவுஞ் செத்தனரோ நெடுநா ளித்தனையோ
வெனவங், தாவிய நாவலறிப் பின்னவர்முன் கொடுபோய் யழலிலி
டும் பிறவிக் கஞ்சுவனே யினியான், 7

நெறியைவிடே னிறைவன் றிருவறமே நினைவே னீதிகொளாக
மநூ லோதினர் கேண்மைவிடேன், வெறியை விடாமலர்மேல் வரு
பவர் தாள்மறவேன் விழிதுயிலும் பொழுதுஞ் சிறிது மறந்தறி
யேன், தறியுமடாவுடலைப் பறியுமடாவிழியைத் தையுமடா கழுவிற்
செய்தனை நீரிவையென், றறியுமடா விங்ஙனென் றெறியுமடாவிவனை
யெனச்சொலுந்தீப் பிறவிக் கஞ்சுவனே யினியான். 8

எறியுநெடுங்கமடன் படையுமிருந்தழலு மெனமலரா யடிமேல்
விழவிழ வன்புமறச் செறியுநெடும்பகைவிட் டடிமலர்வந்துதொழச்
செவ்வன நின்றவர்தாள் சென்னியிலேயுடையேன், பொறிகள் கல
ங்கி மலங் கழிவொடு கீழொருநீர் போகவுமேலொரு நீர் போகவும்
வாய்குழற, அறிவுகழிந்திருகண் சொருகிமறைந்துபதைத் தன்பு
விடும் பிறவிக் கஞ்சுவனே யினியான். 9

பாசநெடும்பிறவிக் கடலில்விழுந்தலையும் பல்வினைவேரறவே
நல்வினை செய்கையிலா, நீசர்களோ நமரோ வெனநினையிற் பிறவார்
நின்பதமைந்தையுமென் நெஞ்சில் மறந்தறியேன், காசமெழுந்தது
கண் சூழநுணத்ததுவாய் கைப்பொருளற்ற தினித் தப்புதல் காரிய
மென், றுசைமுனிந்திளையார் போகவும் நாள்முனியா ராசையறும்
பிறவிக் கஞ்சுவனே யினியான். 10

முற்றும்.

ஸ்ரீ

ஸ்ரீஜிநாயநம:

# இல்லறத்தார்க்குரிய
# தச தர்மம்.

முறைபொறியில் மறைநீங்கி மூவுலகிற் பொருள்களெலாங்
குறைவின்றி யொருங் குணர்ந்த குணதரன்சே வடிவணங்கி
நிறையுடைய மாதவரு மேலோரு நின்றுவப்ப
வறைகுவன் தசதன்ம மறநெறிய தியல்பினால். 1

குளிர்நாவற் பரதத்துக் குருநாட்டுச் சுசிமைகோன்
களியானை யரிவண்ணன் காதலிள மகளிரொடு
மருளாழி யான் கணத்துக் கிறைவன்றன் அடிவணங்கி
விளியாத மனை யறத்தை விரிக்கு மென் றுரைத்தனனே. 2

ஆற்றிய நல்விரதத் தரசனுந் தேவியரு
மேற்றுமின் னடிகளெனக் குரியனதா மென்றிறைஞ்சிக்
கூற்றவனைக் குதித்துயர்ந்த கோட்டமில் சீர் மாதவரு
மேற்றினா ரணுவிரத மில்லறத்தாற் குரியனவே. 3

கொல்லாமை பொய்யாமை கள்ளாமை காமத்தை
யொல்லாமை யொண்பொருளை வரைதலோ டிவைபிறவும்
பொல்லாத புலசுதேன்கள் ளிருளுண்ணா நிலைமையொடு
நல்லாரைப் பணிவதுவும் நாமுறையே பயனுரைப்பாம். 4

பல்லார்தற் பணிவதுவும் பகைகெடத்தாம் பெருகுதலு
மில்லார்க்கொன் றீவதுவும் யினியெனவே நுகர்வதுவும்
நல்லார்கண்டு வப்பதுவும் நலிவிரா னாயின்மையும்
கொல்லாத நல்விரதங் காத்ததன் பயனாகும். 5

புலைக்குடியிற் பிறப்பதுவும் பொல்லாங்கில் வளர்வதுவு
மலைப்புண்டு வருந்துவதும் மருஞ்சிறையி லகப்படலும்
நிலைக்கழுவி லூர்வதுவும் நின்றுறுப்புக் குறைவதுவும்
கொலைத்தொழிலால் மடிவித்த கொடுவினையின் பயனாகும். 6

ஐயெனத்தாம் பெருகுதலு மறிவினல் விளங்குதலு
மெய்யறங்கேட் டுணர்வதுவு முணர்ந்து பிறர்க் குரைப்பதுவுஞ்
செய்தவை நன் ருகுதலுஞ் சிறந்தார் சொற் றேறுதலும்
பொய்யுரையா நல்விரதம் போற்றியதன் பயனுகும். 7

கருப்பையின் மூங்கைகளாய்க் கண்டார்கண் டிழிப்பதுவுஞ்
சொற்பயிலி னிசைகேளாச் செவிடுகளாய்ச் சுழல்வதுவுந்
தற்செயலாய்க் கொடுவினைகள் தாம்பலவந் தெய்துதலும்
பொய்த்துரைத்துப்பொதியரையின் பொருள்விழைவின் பயனுகும் 8

வள்ளல்களாய் வழங்குவதும் வரையறையிற் பெருஞ்செல்வ
மெள்ளற்பா டின்மையு மினியெனவே நுகர்வதுவும்
தள்ளாத விழுநிதியந் தலைத்தலைவந் தெய்துதலுங்
கள்ளாத நல்விரதங் காத்ததன் பயனுகும். 9

வளமையிற் சிறுகுடியிற் பிறத்தலும் வருந்திவாழ்ந்
திளமைகண் ணூண்காணுத் திரிந்துண்டெய் துழல்வதுவு
முளதென்ற பொருள் கெட்டுண் ணீரற்றுழல்வதுவுங்
களவின்கட் கன்றியதீக் கடுவினையின் பயனுகும். 10

மறந்துஞ்சும் நெடுநல்வேல் மன்னர்தம் மகளிரையுஞ்
சிறந்துய்ந்த விழுநிதியச் செல்வர்தம் மகளிரையுங்
கறங்கியநற் றூரியத்துக் கடிமனையிற் செழுமுதலும்
பிறன்ருரம் நத்தாத பெருவிரதப் பயனுகும். 11

பேடிகளாய்ப் பிறப்பதுவும் பெண்டீரிற் கடையராய்
நாடியுண் டுழல்வதுவும் நலனழிந் தலியராய்
பாடியுண்ணுங் கூத்தராய்ப் பலகடையின் முட்டுதலும்
பீடின்றிப் பிறன்ருரம் பிழைத்ததன் பயனுகும். 12

உருளாத விழுநிதிய மொன்பதுக்குந் தலைவராய்
இருளாத பெருங்குலத்துக் கிறைவராய்த் தோன்றுதலுந்
தெருளாத களிறூர்ந்து தேசுமிக் கூறுதலும்
பொருளாக முன்வரைந்த புண்ணியத்தின் பயனுகும். 13

வெறுமனையிற் பிறத்தலும் வேண்டியது பெருமையும்
சிறுமனையிற் சிதலெறிப்ப செய்தொழிலற் றிருப்பதுவு
மறுதொழிலுங் கிடையாதே யலமாந்தெய் துழல்வதுவு
முறுபொருளை வரையாத உலோபத்தின் பயனுகும். 14

வெறிகமழ் தண்ணுற்றமும் விளங்கிய நற்குடிபிறப்பும்
பொறியமை நல் யாக்கையும் புத்திரர்பெற் றுவப்பதுவு
மறிவினால் விளங்குதலும் அறனைமிகக் கூறுதலும்
பிறிதினூணுண்ணாத பெருவிரதப் பயனாகும். 15

மக்கட்பேறிலராயும் பெறினும் பெற்றிழந்திடலும்
துக்கச்செய் தொழுநோயுந் தோன்றியபல் சிரங்குகளுங்
கைக்கோட்டுக் கழலைகளும் கழுவருச்சீயுடம்பு
மக்காலத் தரு ளின்றி யறைந்த நுண் பயனாகும் 16

ஊனமிலா வுறுப்பமைவு முறுதூய்மை யுடைமையுங்
கானிலந்தோய் வின்மையுங் கண்ணிமைப் பிலாமையும்
வானகத்து வச்சிரராய் மகிழ்ந்துவீற் றிருப்பதுவுந்
தேனுண்ணா நல்விரதந் தேர்ந்ததன் பயனாகும். 17

மான்றேலீனிடப்பட்ட மானிடர்தம் மகவாகிப்
பேன்றூங்கும் மயிரினராய்ப் பேய்போலச் சுழல்வதுவும்
ஈன்றவளே கான்றிழித் துரைக்கும் நிலைமையும்
தேனுவந்து முன்னுண்ட தீவினையின் பயனாகும். 18

ஒள்ளியார் ஓதுவதும் ஓதினது மறவாமற்
றெள்ளியறங் கேட்பதுவுங் கேட்டவற்றை யுரைப்பதுவுங்
கொள்ளற்பா டுடைமையும் கூருச்சொல் லின்மையுங்
கள்ளுண்ணா நல்விரதங் காத்ததன் பயனாகும். 19

உள்ளுணரா தொழுகுதலும் உறுதூய்மை யின்மையு
மெள்ளற்பா டிழிதொழில்செய் திழிகுலத்திற் றோன்றுதலும்
கொள்ளற்பா டின்மையுங் கூருச்சொல் கூறுதலுங்
கள்ளுண்டு களித்தாடிக் கழிந்ததன் பயனாகும். 20

அருளுடைமை யாவர்க்கும் அன்பென்று மகலாமை
பொருளுடைமை பொய்ப்பாடில் புல்லினார் பிரிவின்மை
தெருளுடைமை தேசொளிவிட் டிலங்குதலும் திண்வனப்பும்
இருளுண்ணா நல்விரதங் காத்ததன் பயனாகும். 21

அருளின்மை யறங்கொளினு மாய்ந்துணரும் அருளின்மை
பொருளின்மை பொல்லாங்கு பொய்ப்பாடில் வாழ்க்கையு
மருளிகளாய் மயலுற் றவர்போல மயங்குதலும்
இருளுண்டு நல்விரத மிகழ்ந்ததன் பயனாகும். 22

தானத்தால் விளங்குதலும் தன்சொல்மிக்கூறுதலும்
ஞானத்தால் விளங்குதலும் நால்வரிற் றலைவராய்
வானகத்தி னிந்திரராய் மகிழ்ந்து வீற் றிருப்பதுவும்
மோனத்தா லாகிய நன்முழுவிரதப் பயனாகும். 23

வச்சிரக்கை வானவர்க்கு வையமெல்லா முழுதாளுஞ்
சக்கரமா மன்னவற்கும் பலவாசு தேவர்கட்கும்
அக்கரமா தேவியராய் அணிப் பட்டந் தாங்குதலும்
நற்றவரைத் தான்பணிந்த நல்விரதப் பயனாகும். 24

கழுதைநா யூர்ப்பன்றி காரட்டை மூஞ்சூறு
மழுகநாற் கணத்துப்புழு வாகவே தோன்றுதலும்
விழுமிய நன்மாதவரை வீங்கியதோர் மானத்தால்
தொழுதடியைப் பணியாத துவர்த்துமிழ்ந்த பயனாகும். 25

பிணக்கில்லா மாதவரைப் பிணக்கறுக்க வெனவேத்தி
வணக்கத்தாலுயர்குலமாம் வழுவில்லா வுவகையோ
டுணக்கொடுப்பிற் றுப்புரவ முவந்ததனல் வனப்பாகுந்
தணப்பில்லா நல்விரதந் தாங்கியதன் பயனாகும். 26

முற்றும்

ஸ்ரீ

ஸ்ரீஜிநாயநம:

## * திருமேற்றிசைப் பத்து

பொன்னுந் திருந்து மணியும் பொழிந்து
புகழ்கின்ற தேவர் பொலியப்
பன்னுங் கணங்கள் பலகோடி கொண்டு
பணிமா மலர்க்கண் வருமால்
மின்னுங் குணங்கள் வெயிலுந் துணங்க
மிளிர்கின்ற மாட மருகில்
மன்னும் பறம்பை மணிகோயின் மேலை
வளர்கின்ற பச்சை மலையே 1

* இது முதல் வரும் பதிகங்கள் : திரு மேல்மின்னல் சக்கரவர்த்தி நயினார் அவர்கள் திரட்டியவை.

வெல்கின்ற தியான முனைவாள் பிடித்து
வினைவா யடக்கு மிசையே
செல்கின்ற குன்ற மெனமன்ற மல்கும்
செழுமா மலர்க்கண் வருமால்
ஒல்குந் தவங்கள் குணமொன் றெழுக்க
மொளியோசை தேசு ணர்வுசீர்
மல்கும் பறம்பை மலிகோயின் மேலை
வளர்கின்ற பச்சை மலையே. 2

தொல்லைத் தவங்க ளவையாறு மாறு
துணிவித்த சீர்த்தி முதல்வா
ஒல்லைப் புறம்பு மிருளஞ்சி யோட
வெழின்மா மலர்க்கண் வருமால்
முல்லைப் பொரும்பி னறுகால* தாயின்
முத்தங் கடங்கி நண்மா
மல்லற் பறம்பை மலிகோயின் மேலை
வளர்கின்ற பச்சை மலையே. 3

கிளரும் பவங்க டொறுநா ணடந்து
கெழுமித் தழற்கண் முழுகித்
தளரும் பவங்க ளெனமாழ்கு போது
தடமா மலர்க்கண் வருமால்
துளிருங் கரும்பு நெறியப் பொழிந்து
சொரிதேற லுண்டு கயல்சேர்
வளரும் பறம்பை மலிகோயின் மேலை
வளர்கின்ற பச்சை மலையே. 4

திக்கெங்கும் வாழ மணிமுக் குடைந்தண்
ணவையங் கிளைப்ப மடவார்
சொக்கங் குனிப்ப வமரேசன் வந்து
தொழுமா மலர்க்கண் வருமால்
பக்கங் குயின்று பனிமாட நீடு
பருமுத் தணிந்து பதுமம்
வைக்கும் பறம்பை மலிகோயின் மேலை
வளர்கின்ற பச்சை மலைமய. 5

---

* தாயின்று என்பது ஏட்டுப்பிரதி

தாழுங் குணங்க ளவையாறு மாறு
தவிரப் பணிந்து நயமோ
ரேழுந் திருந்தி யிமையோர் வணங்க
வெழின்மா மலர்க்கண் மருமா
லாழுந் தடங்கள் மதுவாய் ததும்ப
வயல்தா மரைத்தண் வயல்சூழ்
வாழும் பறம்பை மலிகோயின் மேலை
வளர்கின்ற பச்சை மலேயே. 6

எய்கின்ற வம்போ டிடுகின்ற குன்ற
மெறிகின்ற வேலோ டிவைமுற்
செய்கின்ற தொன்று மறிவின்றி நின்று
திருமா மலர்க்கண் வருமால்
எய்கின்ற வின்றி நறைவாச மல்கி
நிறைகின்ற சாலே யெங்கும்
வைகும் பறம்பை மலிகோயின் மேலை
வளர்கின்ற பச்சை மலேயே. 7

துயர்சூழ் குடம்பை நடுவட் பிணித்த
தொழுவித் துளங்கு போழ்தியா
னயல்சூழ லெங்கு மலமந்து தேட
நலம்வந் தளிக்க வருமால்
கயல்சூழ் பொருந்தி யுகளக் கருப்பு
கழுகோடு செங்நெ லலேயும்
வயல்சூழ் பறம்பை மலிகோயின் மேலை
வளர்கின்ற பச்சை மலேயே 8

அலரம் புயங்க ளறையா யிரந்தன்
னடியிட் டிசைப்ப நடுவே
தலரும் புகழ்ந்து தொழுகின்ற தென்ன
வருமா மலர்க்கண் வருமால்
அலரும் புகொங்கை காவாய் முகங்கை
பதுமத் தடங்கள் பலவும்
வளரும் பறம்பை மலிகோயின் மேலை
வளர்கின்ற பச்சை மலேயே. 9

உளமா சுணங்க வுயர்கா மனஞ்ச
வுறுகான லொல்கி மறுகிக்

களமார் கணங்கள் வினையோட வென்று
கமலம் பொருந்தி வருமால்
இளமாதர் கொங்கை யிழையால் விளங்க
விரவோடு காலை யறியா
வளமார் பறம்பை மலிகோயின் மேலை
வளர்கின்ற பச்சை மலையே, 10

முற்றும்:

ஸ்ரீ

ஸ்ரீஜிநாயநம:

# திருமலைப்—பத்து

விரைசிந்துநன் மலர்தூவிவிண் ணவர்கோனுமண் ணுல
கோர், அரசுந்தொழு மடிதந்தெமை யாள்கொண்டவ
ரிடமாம், பிரசந்தரு குழலந்தரி பெறுசுந்தரி விழிநம்
வரசுந்தரி மயில்போலுறை வைகைத்திரு மலையே. 1

உலரும்பயி ருயவண்புன லுதவும்புய லெனநன்
கலருந்திரு மொழிதந்தருள் மழைசிந்தின ரிடமாம்
புலருஞ்சுனை மிசையூறிய புதுநீரொடு கழுநீர்
மலருஞ்சுனை யிடையாளுறை வைகைத்திரு மலையே. 2

நெய்கைக்குழ லெனவொன்றினு நிலையாதுழல் வினையேன்
உய்கைக்கொரு வழியார்நெறி யுடையாருறை யிடமாம்
செய்கைத்தவ ரெண்ணுயிரர் சிரமங்கெட வுடனே
வைகைத்திரு வுடையாளுறை வைகைத்திரு மலையே 3

யானுஞ்சுரர் நிரையுந் தொழு மிறையும்பணி கொடுநீள்
வானுஞ்சிவ கதியுந்தர வலநாயக ரிடமாம்
கானும்கனி மொழியக்கமு கனையுந்துணை விழியோர்
மானும்புன மயிலும்பயில் வைகைத்திரு மலையே. 4

நிழலைத்தரு செயலைத்தரு நிறைமுக்குடை யிமையோர்
சுழலத்தரு துதிசெய்செய லுடைநற்றவ ரிடமாம்
சுழலத்தனன் மொழிகற்போரா சுதலைக்கவி முகமாய்
மழலைக்கிளி யுடையாளுறை வைகைத்திரு மலையே. 5

உளமெண்ணிய கொலேயும்பொயு முறையெண்டவர் விழைவும்
களவும்பொரு ணசையுங்கடு விடமென்றவ ரிடமாம்
இளவஞ்சியொ டெழுபைங்கமு குடனென்றிய தெனவோர்
வளர்பைங்கமு குடையாளுறை வைகைத்திரு மலேயே. 6

திடம்வந்ததோர் படியார்தெறு கதிர்தேர்மிசை வரவோர்
தடமென்பெரு வரைமேல்வரு சகநாயக ரிடமாம்
உடலொன்றிய வச்சந்தமு முயர்சாரண கிரியு
மடவிந்தமு முடையாளுறை வைகைத்திரு மலேயே. 7

கள்ளப்பொறி யவையிற்றெடு கலவாதமெய் யன்பர்
உள்ளப்பொனி னெயில்புக்கினி துறைவாருறை யிடமாம்
கொள்ளக்குள வரிசிக்குவை குறையாததோர் வகையார்
வள்ளற்குள முடையாளுறை வைகைத்திரு மலேயே. 8

பொறிவிட்டொரு முறைவிட்டொரு மறைவிட்டொரு
பொழுதே, யறியப்படு பொருள்யாவையு மறிவானுறை
யிடமாம், எறிதற்கெதிர் வருதாமரை யெறிவாள்கொளும்
படையால், மறியத்தனி பொருதாளுறை வைகைத்திரு மலேயே. 9

நிலேமேவிய கதிமேவிய நினேவாருமோ ருயிர்போ
லலேமேவண னேயோதிய வ்விரோதிதன் னிடமாம்
கொலேவேல்விழி சிதர்சேயரி குழல்மேலரி கடவும்
மலேமேலரி யுடையாளுறை வைகைத்திரு மலேயே. 10

முற்றும்

ஸ்ரீ

ஸ்ரீஜிநாயநம:

## சிற்றூர்ப்—பத்து

பூவாய் விரையு மணிவா யொளியும் போலொளிர் புணரின்ப
மீவா யொழியா யடியே னெழியே னேயாளுந் தாள் மேன்
மூவா முதலா முடியா வறிவாய் முழுமூ வுலகாளுந்
தேவா திபனே திருவார் பெருமைச் சிற்றூ ரூரானே. 1

உந்தா வருநீ ருழியார் சுழிபோ லுழலு மடியேனுக்
கெந்தா யருளா விடினு மடியே னினியுன் னடியேற்கின்
பந்தா மரைசேர் பததா மரையாய்ப்பரவு மடியார்தஞ்
சிந்தா மணியே சூளா மணியே சிற்ரு ரூரானே. 2

வீடுங் குடியும் விபவங் களுமே னியும்விட் டொருபாலே
ஓடும் பொழுதென் பெருமா னவர்தா முதவுந் துணையாவார்
ஆடுங் கதிரா டகம்விட் டடியே னுபத் தனமாகத்
தேடும் பொருளே மாடொண் பொழில்சேர் சிற்ரு ரூரானே. 3

காதிப் பெருமைக் கருமத் துகளிர் கழுமக் கதிதோறும்
பேதித் துலகிற் பிரமிக் குமெனக் கருளிற் பிழையாமோ
ஆதிச் சிநனே யமரர்க் கமரா வகிலச் சுகமீயுஞ்
சேதிக் கரசே சீதப் பொழில்சூழ் சிற்ரு ரூரானே. 4

காமத் துணையா மடவா ருதவார் கலவா ரெனவுற்ருர்
ஈமத் துணைமே விடுமித் தனையே யெனவந் துனையுற்றேன்
தாமப் பொழில்சூழ் தடமுக் குடையாய் தமியே னுடனேகுஞ்
சேமத் துணையே சீதப் பொழில்சூழ் சிற்ரு ரூரானே. 5

கொங்காய் முகையாய் மலராய் மலரின் குணம்விட் டதுபோகிப்
பைங்கா யொடுசெங் கனியாய் விழுமிப் பவமஞ் சேனையாள்வாய்
இங்கா ரறிவா யென்னையா ளுடையா யெதிரே கதிர்வீசுஞ்
சிங்கா தனனே சிந்தா வளமைச் சிற்ரு ரூரானே. 6

நும்புன் னுனிநீர் நனிநா ளுகருங் கரவின் றுன்பாதம்
நம்பு மடியே னென்னைநீ விடினு நரகா திகணண்ணேன்
அம்பொன் மலர்மே னயந்தீ ரைந்திரு காதம கன்றிலகுஞ்
செம்பொன் னெயிலாய்ப் பைம்பொன் மதில்சூழ் சிற்ரு ரூரானே 7

உருவாய் நலனு முயர்வா னகமு முடனுள் வதில்யானே
குருவா யொழியு மதுவே யமையும் படியே னென்னையாள்வாய்
ஒருவா சகமே பலபா டையுமா யுலகோ ருயவோதுந்
திருவாய் மொழியாய்த் திருவார் பெருமைச் சிற்ரு ரூரானே. 8

விசைகொண் டிடுதே ருருள்போற் கதிவாய் விழுவித் தெழு
விக்கும், பசையும் பரிணு மமுமுண் டுகளும் பருவித்

தருளென்றுய், நசையின் பகைவா நடவுங் கமல நனிநன்
குடையாயெண், டிசைவெண் டுகிலாய்ச் சொரிபைம் பொழில்
சூழ் சிற்று மூரானே. 9

பாபங் கடியும் பதமா மலர்நின் பதமே பதமேலுங்
கோபங் கடியுங் குளிர்கா யாமன் கோவிந் தனையாள்வாய்
தாபங் கடியுந் தவிரா வருளா லவிரோ திகள் சேருந்
தீபங் குடியாய் செல்வங் குடிவாழ் சிற்று மூரானே. 10

முற்றும்.

ஸ்ரீ

ஸ்ரீ ஜிநாயநம:

## பணவரங்கப்—பத்து

தீருமென் றிடுபலம ருந்தினுந் தீர்தலன்றி பொய்கூர்தல் கண்டு கொண், டியாருமென் கணின்றகல வஞ்சினே னென்னையாளு மாறிங்ங னேகொலோ, ஊருமம் புயத்தேறு மாவினை யுடைய நாதரேயுரக ணுடுமிப், பாருமும் பரும் பரவு தீபையுட் பருமணித் துணைப்பண வரங்கரே. 1

முன்னநன் னெறிபடர்கிலாமையால் முடையுடம்பை யிக் கிடையிலிட்டநோய், இன்னமுஞ்சினந் தணிவதில்லையா லென்னை யாளு மாறிங்ஙனே கொலோ, சொன்ன பேரொளி பிறந்து வாழ் தரு சோதிமண்டலத் தாதிநாதரே, பன்னு செந்தமிழ்க்குலவு தீபை யுட் பருமணித்துணைப் பண வரங்கரே. 2

வந்து மாயவிப் பிறவி நோயெலா மாற்ற வல்லதோர் வழி மொழிந்து நீர், இந்த நோய் தணித்தருளுகின்றிலீரென்னை யாளுமா றிங்ஙனேகொலோ, சந்தனுடவிப் பொதிய மாமலைத் தண்ணென் மாருதத் தவளமல்லிகைப், பந்தவாச முண்டுலவு தீபையுட் பருமணித்துணைப்பண வரங்கரே. 3

உறவு மன்பருங்கிளையு மென்னுடற் குருவுமாக யானுடை யதும்மையே, இரவில்வந்துநின் றஞ்ச லென்கிலீரென்னை யாளு மாறிங்ஙனே கொலோ, நறவலர்ந்தபைம் மொழிலரங்கெலா நாகிளம் பசுந்தோகையாடமென், பறவை வண்டின மிசை செய்தீபையுட் பருமணித்துணைப்பண வரங்கரே. 4

கேடுபட்டிட வேகமாகவே கெட்டகாலனர் விட்டெறிந்தவே, வீடுபட்டுடம் படுதலஞ்சினே னென்னையாளுமாறிங்ஙனே கொலோ, கோடுநித்திலச் செம்பொனுரமுங் குஞ்சரங்களுங் குரகதங் களும், பாடுமுத்தமிழ் பரவுதீபையுட் பருமணித்துணைப்பண வரங்கரே. 5

ஊனமின்றியே வடிவுகாணலா லுள்ளுளுள்ளதோரொன்றுமில்லை யா, யானையுண்டதோர் வெள்ளிலாயினேனென்னையாளுமாறிங்ஙனே கொலோ, தேனலர்க்குழனறு மடந்தைமார் திலதபங்கயச் சேயரிக் கணர், பானலந்தடங் குலவு தீபையுட் பருமணித்துணைப் பணவரங் கரே. 6

பெருகு காதலங் கிளையுமைந்தரும் பெற்றதாயரும் பெண்டிருங் கரிந், திருகணீர் சொரிந்தினைய நோயிலிட் டென்னையாளுமாறிங் ஙனே கொலோ, தேனலர்க் குழனறு மடந்தைமார் திலதபங்கயச் சேயரிக்கணர், பானலந்தடங் குலவு தீபையுட் பருமணித்துணைப் பணவரங்கரே. 7

முழுமெயும் பனித் தறிவழிந்து நோய் முதியனுகி மிக்கவு முடங்கினே, னெழுமையும் பிடித் தடிமை கொண்டு நீ ரென்னை யாளுமாறிங்ஙனே கொலோ, தொழுமகன் றலைப் பரவை நாவலஞ் சோலைவாழுமித் தொண்டருண்கெனப், பழுமரம் பழுத்தனைய தீபை யுட் பருமணித்துணைப் பணவரங்கரே. 8

கெட்டகாலனர் காலமின்றியே கிளையிருந்தழக் கிளருநோயு ழன், றிட்டகால்களுங் கையுமாயினே னென்னை யாளுமாறிங்ஙனே கொலோ, வட்டவாழியில் மன்னரெண்ணில்சீர் மன்னர்மேல் கொளக், கன்னல் சாமரைப் பட்டயானைதேர் குலவு தீபையுட் பரு மணித்துணைப் பணவரங்கரே. 9

புரவியேழுடன் சுடர் வலஞ்செயப் புவியுறங்கவே புள்ளுமாயு மிவ், விரவின் மாலுழன் றணிமைபோத்துட னென்னையாளுமாறிங் ஙனே கொலோ, வரவின் மேலவ னவிரோதி வாக்கரச னுவி னிற்றுதிகளானவை, பரவி நாடொறும் பண்கொள்தீபையுட் பரு மணித்துணைப் பணவரங்கரே. 10

முற்றும்:

ஸ்ரீ

ஸ்ரீ ஜிநாயநம:

# அருகர்—பத்து

சமவசரணுதிபனே பொற்சரணம்புயனே தனிமுதலே, அமரர் துதிக்க மகிழ்வோனே யணியாதழகா வலர்ந்த செழுங்கமலா சனனே மெய்ஞ்ஞானக் கடலே யடியார் கருத்திலுறை நிமலா வருகா வெனவொருகால் நினைந்தார் பிறவி தொலைந்தாரே. 1

வசையா மிழிவா மடமாதர் மயலார் வெள்ளத் தழுந்தியங்கே, வச மாய்த் துரிதக் கவைபுரிந்து மதங்கொண்டலைய வோபரங்காண், இசையே பெருக மதிதுலங்க விட்டமளிக்குங்கரங் குவித்து, நிச மாயருகா வெனவெருகால் நினைந்தார் பிறவி தொலைந்தாரே. 2

திகழ்பூப் பிண்டிநிழலுடையாய்த் திக்கேயுடையாய் முக்குடை யாய், புகழ்தேவர்கள் செய் பணிவிடையாய்ப் புனிதத் திகிரிப் படை யுடையாய், செகமூன் றினையுங் காப்பாற்றுந் திறத்தாயுனக்கு வேறொருவர், நிகரா வருகா வெனவொருகால் நினைந்தார் பிறவி தொலைந்தாரே. 3

தீதாகிய தீவினையணுகாச் செகசாட்சியு நீயெனையாள் வாய், வேதாகமங்கள் யாவையுநீ விரித்தா யீரேழுலகினுக்கும், நாதா விரத் தின சிங்காச ஞதிபதியேசிநபதியே, நீதா வருகா வெனவொருகால் நினைந்தார்பிறவி தொலைந்தாரே. 4

சுத்தத்தவர்கள் தினம்பணியுஞ் சுடரே காதிதனைக் கடந்தோய், சித்தசனைக் கனன்றெரித்தாய் செங்கோற் கடவுடனைச் செயித்து, முத்தித்திருவுக் கதிபதியாய் முடிவிலின்ப மடைந்தோனே, நித்த வருகா வெனவொருகால் நினைந்தார் பிறவி தொலைந்தாரே. 5

அருவாயுருவா யோளியாகி யகண்ட பரிபூரணமாகித், திருவாய் மொழி மூவாருகித் திகழுந்தெய்வத் தொனிமுழங்கச், சுரர்தா டொழுதே யிருபாலுந்துதிக்க வரியர்ச் சிக்கவரும், நிருபா வருகா வெனவொருகால் நினைந்தார் பிறவி தொலைந்தாரே. 6

கொத்தார் கந்தமலர்ப் பிண்டிக் குளிர் நீழலில் வாழெண் குணத் தாய், அத்தா செம்பொனெயிலுடையா யடியாருளத்திற் குடி

கொண்டாய், சித்தா கருணையங்கடலே திகழ் மெய்ஞ்ஞானச் செழுங் கொழுந்தே, நித்தா வருகாவென வொருகால் நினைந்தார் பிறவி தொலைந்தாரே. 7

மின்வாலச்சை யறியாது வெட்கமறியா திழுக்கறியாச், சின் வாலிபத்தி லுணக் கொண்டு திரிவார்கதியிற் சுழல்வார்கள், என் வாலறிவாய் நீயுரைத்தா யிதனை மறந்து மனந்தெளிந்து, நின்வால ருகாவென வொருகால் நினைந்தார் பிறவி தொலைந்தாரே. 8

கொலை பொய் களவு காமந்தேன் கொடிதென்றுரைத்தாயிரவுண் ணல், இலையென்றுறுதி மொழியுரைத்தா யியலாமடியார் தமக்கு மெய்ந்நூல், மலைவில்லாத வாறேழும் வகுத்தாய் செகத்தாய் மகத் தான, நிலையா வருகா வென வொருகால் நினைந்தார் பிறவி தொலைந் தாரே. 9

கடலாம் பிறவித் துயரகலக் கடிமாமலர்மேல் வருமுனது, அடிதானலது வேறுதுணை யறியேனுன்றனடியே னென், முடி மேலுனதாள் மலர்சூடி முன்கை குவித்து மதியினிலே, நெடியோ யருகா வென வொருகால் நினைந்தார் பிறவி தொலைந்தாரே. 10

செனனப் புணரிக் கரையணுகத் திரும்பிக் காதற் பெருமுதலை, உனை நான் விடவா வெனவுறுமி யென்னை யிழுக்க வொட்டாமல், மனமொத்துனது திருவடி நான் வணங்கிக் கிருபை தருதியெனும் நினைவாலருகா வெனவொருகால் நினைந்தார் பிறவி தொலைந்தாரே. 11

முற்றும்

ஸ்ரீ

ஸ்ரீ ஜிநாயநம:

## மயிலாப்பூர்—பத்து

பெருகலர் மாமழை பெய்தொரு சுரர்முகில் பெயர்வது போலி மையோர், அருமலர் தூவிய வலைகடன் மேல் வரு மரிகுலநாயகளூர், கருமலி யாலய மொடுமணிமாளிகை கடியிதழ் தாதெனவத், திருமலி தாமரை கருமலி பொன்மலி திருமயி லாபுரியே. 1

துருவம ரைவுடல் கொடுசுழல் வோர்தம துணையடி சேரினவர், கருவநன் மாமணி யவைதிசை யேதரு மரிகுல நாயகரூர், அருவ நன் மாமணி யொளிகலன் வானவ ரருணர் செய் மாதொடுநீள், தெரு வெனு மாறுகல் சிவணிமுன் னீர்புரை திருமயி லாபுரியே. 2

ஒளிதரு தண்ணிழல் குலவியோ ரோசனை யுயரமொ ரோசனை யிற், களிதரு நாண்மல ரணியும சோகுடை யரிகுல நாயகரூர், விளி தரு மூடமும் வினையும் விடாமயல் வீடரு நால்வகையிற், றெளிதரு சாவகர் செழுமனை யேமலி திருமயி லாபுரியே. 3

நிமிரும சோகமு நினைவில சோகமு நெடுமொழி யாகி யபோழ், துமிழ்வள வாடக விடமுன மேவிய வரிகுல நாயகரூர், இமிழ்திரை வேலையி னிடைமண லாகிய வொளிநீ லவனுடையும், திமிரம தாமென வெறிதிரை நீர்பெயர் திருமயி லாபுரியே. 4

வரிவளை யார்திரு மருவல ராய்நல மருவிய செல்வமதா, யரி வையை மூவுல கலரெழ நேர்புண ரரிகுல நாயகரூர், விரியுமுஞண்மதி வெயினிலை யாகவா முதல் வெளி யாயுறைய, திருவிதை யோகிக ளிருவினை தீர்தகுந் திருமயி லாபுரியே. 5

வினையிருள் போழ்வன மிசையல சோதியை விலையுமிலாதனதா மனையமு மாமணி யருளின மாள்கொளு மரிகுல நாயகரூர், நனை யணி ஞாழலி னறைகமழ் வீகளை வரியளி தும்பிகள் சேர், தினை யெனு மீமிசை சிறுதுளி ரேதரு திருமயி லாபுரியே. 6

உவ்வுடை நாண்மதி யொளிமுக வாணுத லுழை விழி யேழை யர்மே, லவ்வுடை யாரரு நரகுடை யாரெனு மரிகுல நாயகரூர், நவ்வுடை யார்துகி னகிவினை யோதிம நடைநறை நாறுகுழற், றிவ் வுடை யாமொழி யவர்மலி பொன்மலி திருமயி லாபுரியே. 7

பவகத மாகிய பகைபசி நோய்பல பழவினை வேரறுவித், தவ கதமாகிய வகிலவ சோகுடை யரிகுல நாயகரூர், சிவகதி யேதரு தொழுபவர் தீவினை சேர விலக்கிவிடுந், திவதொனி யேமொழி பவரிட மாகில திருமயி லாபுரியே. 8

வியலொரு பூமிசை வருமென வானவர் புதுமலர் தூயவர் மே, லயவிரு சாமரை குலாவ வுலாவுந மரிகுல நாயகரூர், இயலிசை தேர்பவ ரிருநிதி யீபவ ரிருடிகள் யாவருநற், செயலவி ரோதிகள் திருவுடை யாரறி திருமயி லாபுரியே. 9

முற்றும்

ஶ்ரீ

ஶ்ரீ ஜிநாயநம:

# திருப்பறம்பூர்

## தரும தேவதைப் பத்து

சீரார் திருக்குடைச் செல்வன் பதாம்புயஞ் சென்னி வைத்து
ஏரார் கமுகு நிழலினின் மேவிய ஏகியுந்தன்
காரார் கமலத் திருப்பத மீந்து கருணை புரி
தாரார் புகழ்பறம் பாபுரி வாழ்தர்ம தேவதையே,

உந்த னிருபதத் துண்மை யறிந்தே யுனைவணங்க
எந்தன் வினையி னிடர்தவிர்ப் பாயெங்கள் நாயகியே
பந்த மகற்றிப் பதமே புரிந்தருள் பார்புகழும்
அந்த மிலாத பறம்பா புரியுறை யம்பிகையே. 2

தக்க மலருந் தளிருங் கனியுந் தழைக்கு கின்ற
மிக்க கமுகு தன் னிழலின் மேவிய வன்னையுந்தன்
நக்க மலர்ப்பத நான் மற வேனினி நாயினேற்குத்
துக்கங் கெடுத்துச் சுகமீ பறம்பையிற் சுந்தரியே. 3

கந்தம் பெருத்த கமுகினன் னிழற் கருணைவல்லி
எந்தம் பிறவி யிணையடி யேறிட வென்வினையின்
பந்த மகற்றிப் பதந்தரு வாய்பர மேஸ்வரியே
சுந்த ரமான திருப்பறம் பாபுரிச் சுந்தரியே. 4

பூத்தா மரைவசி நேமீசர் பாதம் புகழ்ந்தறத்தைக்
காத்தாள் கமுகு தன்னிழ லின்மேவுங் கருணைவல்லி
மாத்தாப் பகடன் வருமுன்ன மென்னை மகிழ்ந்து நித்தம்
ஆற்ருத் துயரல்லல் தீர்பறம் பாபுரி யம்பிகையே. 6

அறமே விளங்க வகளங்க மாமுனி யன்பினின்று
திறமாறு கொண்டவத் தீவினைப் புத்தர்ச் செயித்தவளே
நிறமான பச்சை நிறத்தவ ளேநிதி போலுதவுங்
பறவோர் புகழ் பறம்பாபுரி மேவிய சுந்தரியே. 5

எண்ணு யிரமுனி வோர்க்கமு தீந்து மியல்புடனே
துண்ணு கவுச்சசந் திரகிரி வாழ்பர மாகமத்தின்

நண்ணுக வுந்த னறுங்கம லப்பத நான்மறவேன்
விண்ணோர் புகழுந் திருப்பறம் பாபுரி வித்தகியே. 7

ஆதா ரமான வறநேமி நாத ரடியிணையைத்
தேதா வெனவண்டு பாட முடிமிசைச் சேர்த்தவளே
வீதாவும் பிண்டி யுறைபவன் றன்னை விரித்தவளென்
மாதா வெனப்பறம் பாபுரி வாழ்தன்ம தேவதையே 8

பாதா திகேச மழகுடை யாள்பரஞ் சோதிபத்ம
மாதார முக்குடை யாளயி ராணி யழகினுடன்
சாதா ரரசன் சருவாணி யட்சன் மனோகரியே
வேதா கமங்கள் திகழ்பறம் பாபுரி வித்தகியே, 9

கொண்டலை யன்னநங் கொற்றவர் கோனைக் குடதிசைவாய்
நிண்டவர் பச்சைநிறப் பாரிச நாதர்தங் நீள்வரையில்
மண்டலம் போற்று முகுந்தன் மகிபன் மனமகிழுந்
தண்டலை சூழ்பறம் பாபுரி வாழ்தன்ம தேவதையே. 10

காந்தக்கல் வாசியும் போரே கலந்தட்ட கன்மங்களைத்
தீர்ந்திட்டு நல்லறஞ் செய்தவ ளேபசுஞ் செவ்விகுன்றாக்
கூந்தற் கமுகின் கொடிபட ரேவஞ்சிக் கொம்பனைய
சாந்திற் பரிமளத் தாய்வைகை வாழ்தன்ம தேவதையே 11

முற்றும்

ஸ்ரீ

ஸ்ரீஜிநாயநம:

# திரு இரட்டை மணி மாலை.

## வெண்பா

ஆக்கிய தொல்வினையு மாகும்வினைப் பயனும்
போக்கினே னம்பாற் புகுதாமல்—நோக்கருஞ்சீர்
விண்ணவர்தங் கோமான் வெறிமலர் மேல்நடந்தப்
பண்ணவனைப் பாடிப் பணிந்து. 1

## கலித்துறை

பணிநிழற் பச்சைமலை யென்றும் பண்டைவினை துணியார்
துணிவர்கள் தொண்டைச் செவ்வாய் நற்றுடியிடையார்
துணியாத காதற்ற மூலடைப் பட்டவர் தாள் பணிந்து
பிணியார் பிறவிக்கடல் கடப்பாமெனும் பேதையரே, 2

### வெண்பா

பேதையர் காதம் பிணக்கறுக்கும் பூம்பிண்டி
நாதனை முக்குடைக்கீழ் நாயகனைக்—காதிவினை
செற்றானை மாலைத் திசைமுகனைச் சென்றடையப்
பெற்றேன் பிறவேன் பெயர்த்து. 3

### கலித்துறை

பெயர்த்தாம் பிறவியிற் சென்றடையாவகை பேசியவேழ்
நயத்தானைப் பொன்னெயில் நாதனை யல்லது நான்பணியேன்
பயத்தாற்படைபிடிக்கும் பலகாமம் பகுதியாரம்
மயத்தார்க ளுளராமென்றுரைக்கும் கடலிடத்தே. 4

### வெண்பா

இடம்பாத்து மன்னரை யேல்வளையார் கொங்கைத்
தடம்பார்த்து நின்று தளர்ந்தேன்—மடங்கல்சே
ராசனத்தா யம்பொன் னெயிலாயோ ராறிரண்டு
மாசனத்தா யென்னுமென் வாழ்வு. 5

### கலித்துறை

வாழ்வாய மக்களுஞ் சுற்றமு மாடுமனையு மென்று
தாழ்வாயொருவகை தாழ்ந்திலையே சற்றுந் தன்னையாக்கோ
ரேழ்வாகயிற்றினளவு முலகத் தியல்புதந்த
பேழ்வாயரியணை யானடிப் பரவுதுமென் பிறப்பறவே. 6

### வெண்பா

அறுபொருளு மைம்பதமும் நாற்கதியும் யார்க்கு
முறுவதமும் வீட்ட தொளியும்—பொது முறையான்
முன்னுரைத்தான் முக்குடைக்கீழ் மூவா முதல்வனன்றிப்
பின்னுரைத்தா ருண்டோ பிறர். 7

### கலித்துறை

பிறவேன் பிறந்தும் வந்தேனிட வேண்டினும்
மறவேன் மறக்கினும் நீமறவாதொழி வஞ்சம்
துறவேன் றுறந்தவர் தூயநெறியே யடித்தொண்டர்க் கெல்லா
முறவே யுனையடைந்தேன் குடைமூன்றுடை யுத்தமனே. 8

## வெண்பா

உத்தமனை மூவுலகோ ரெல்லா முடனேத்துந்
தத்துவனை முக்குடைக்கீழ்ச் சங்கரனை—மெய்த்தவர்க்கு
நோக்கரிய நுண்ணூல் நுவன்றானை யல்லாலென்
வாக்குரைக்கு மாறுண்டோ மற்று. 9

## கலித்துறை

மன்னவ ராகி மகிதல மாள்பவர் வாழ்வு மற்றும்
புன்னுனி மேற்பனி நீரென வெண்ணிப் புகுந்து நின்று
தென்னென வண்டிரை பாடும்பொழிற் பிண்டிச்செல்வன் பொற்றா
ளுன்னிய மாதவர் பாதங்க ளோதி யுணர்ந்தனரே. 10

## வெண்பா

தனத்தைத் தனமென்று தாழ்ந்து தளர்வெய்தி
மனத்தைக் கவற்றுவர் கணமாதோ—வனைத்துலகும்
போற்றுமதி முக்குடைக்கீழ் புங்கவன்றன் பொற்பாதம்
போற்றாமற் றேற்று மதியார்கள் சுழன்று. 11

## கலித்துறை

சுழலுங் கதிகளோர் நான்கினுந் தோன்றிச்
சுழன்றிங்ஙனேயுழலுமெனக்கு மொன்றாவதுண்டோ வெங்கதிரோ
னழலுஞ்சு மென்றலமருங் காலத்தடைந் தவர்க்கோர்
நிழலுங் குளிர்புனல் வாவியும் போலு நிருமலனே. 12

## வெண்பா

மலைகொண் டலைகொண்டு மண்கொண்டு வாளிச்
சிலை கொண் டெதிர்ந்தவனுஞ் சென்று—தலைகொண்டு
வந்திப் பானின்றருளும் வாமனடித்தவிரச்
சிந்திப்பா ரன்றோ சிலர். 13

## கலித்துறை

சிலசில போலிப் பொருணங் கொண்டு துரு நயத்தார்
பலபல பேசும் படித்துறை கொள்ளப் பகைபசிநோய்
பொலமலந்தீவினை பொய்ம்மையு மற்று மறம்புகலக்
குலமலர் மேல் நடந்தா னடியா ரிக்குவலயத்தே. 14

## வெண்பா

அத்திகளோ ரைந்தும் பொருளாறு மேழ் நயமும்
பத்துவிதமும் பணித்தானைச்—சித்தித்
திருநாட்டா ரென்றென்றுஞ் சிந்திப்பா ரன்றே
தரு நாட்ட ராவார்கள் தாமே. 15

## கலித்துறை

தாமே யுலகங்கள் மூன்று நின்றேத்த முச்சத்திரமுந்
தாமே கவிப்பத்தனித்தனியே நின்று பல்லியமுந்
தாமே யிரயம்பத் தறுகண்மை செய்த வாதரமும் வந்து
தாமே யிறைஞ்ச முன்னின்றவர்தா மெங்கள் சங்கரனே. 16

## வெண்பா

கரவிர வுணக் கொலை கட்டென புலசுமற்றும்
விரவம் பிறர்மனை பொய் வேட்கை—பரவு
முறுவர் பழித்தலென விவையோர்பத்து
மிறுகலை யென்று னிறை. 17

## கலித்துறை

இறவா ரிருவினைப் பாசத்திற் கட்டுண்டு நாற்கதியிற்
பிறவார் பிறப்பினும் வீடே பெறுவர் பெருக்கொளிசே
ரறவாழியந்தண னென்றிராப்பகலா யலர் தூஉய
மறவாது குற்றங்கள் மூன்றையு மாற்று மதியவரே 18

## வெண்பா

மதிகொள் குடைகவரி சிங்கவணை வாடாப்
பொதியவிழ் பூம்பிண்டிப் பூமாரி—துதிசேர்ந்த
பண்குணத்தப் பேரிசை துந்துப் ரபாவலய
மெண்குணத்தார்க் கேயு மிவை. 19

## கலித்துறை

இவையிவை யாகு மிறைவன்றிரு மொழியென்றுகொண்டு
நவையவை தீர்க்கு முபாயம் நண்ணார் சிலர்தானடுவே
எவை யெவை போற்றி யிருப்பார் மனத்துக் கிவைகள் சொல்லி
யவை யவை போற்றி நின்றந்தோ வினைபல வாக்குவரே. 20

திரு இரட்டை மணி மாலை
முற்றிற்று.

ஸ்ரீ

ஸ்ரீஜிநாயநம :

# சிற்ருமூர் தருமதேவி

## ஊசல்

திருமகளும் நாமகளுமேவல் செய்யத்
தேவர்குழாம் வந்துமலர்சிந்திப் போற்ற
அருமுனிவ ராரியாங் கனைகள் சூழ
அரம்பையரும் விஞ்சையரு மாடப்பாட
முரசுபல வல்லியங்கள் முழங்கத் திங்கள்
முக்குடைக்கீழ் முதல்வனடி முடியிற் கொண்டு
மரகதமே வல்லியா ராடிருசல்
வாய்த்த சிற்றை சுந்தரியே யாடி ரூசல் 1

பூமாதும் நாமாதும் புகழ்ந்தே போற்றிப்
புனிதரெல்லா மலர்மாரி புகழ்ந்தேதூவ
மாமாது புகழ்ந்து தென் வைகைசூழ் மாதவரும்
மாதவத்து மங்கைமாரும்
தாமாகவே நிறைந்து செய செயென்னத்
தனம்மதி முக்குடைக் கீழ்த் தம்பிரானைத்
தேமாது முடிமீது வைத்துக் கொண்டு
சிற்றைவாழ் மரகதமே யாடிரூசல் 2

மாதவத்துக் கெல்லையில்லா முனிவரெல்லாம் வழிநடந்து
யிளைப்பாற்றி மனத்துயரந் தீர்த்து
ஆதரித்து வாகா ரமளித்து நாளும்
அருகரறந் தழைப்பித் தீராடிரூசல்
பேதமற்றத் திருவறமே யாடிரூசல்
பெருந்தவத் தோர் பெருந்தகையே யாடிரூசல்
சீதமுற்ற பதிமுகத்தீ ராடிரூசல்
சிற்றைவாழ் மரகதமே யாடிரூசல் 3

மும்முனிவர் திருப்பரித்திக் குன்றில் வாழ்த்
திருப்பறம்பை கூனை முதலூரேயேத்தி
அம்முனிவர்க்க முதளித்த வைகை வாழ்த்தி
அருங்களந்தை ஆறணி மயிலாப்பூர்பாடி

விம்முலேக்குள் புளகமேழ் ஆடிரூசல்
வீரபுரத்தன மசைய வாடிரூசல்
செம்முக மண்டலத் தெம்மையாடிரூசல்
சிற்றைவாழ் மரகதமே யாடிரூசல் 4

முன்னளிற்கரிகால சோழன் முன்னே
முதலனேயசாந்தி முனியிறங்கலமுமிட்டு
அன்றளே யெல்லேகண்டீராடிரூசல்
அருள்திருவா யுரைசெய்தி ராடிரூசல்
பொன்னன திருவறமே யாடிரூசல்
புளகயிள முலேயசைய வாடிரூசல்
தென்றதென்ற வென்றே யளிகள்பாடச்
சிற்றைவாழ் மரகதமே யாடிரூசல் 5

அருட்சிந்தை யிளங்கொடிக ளாசுபாடி
அதன்முன்னும் சம்பந்தன் பாடல்கொண்டு
குறிச் செல்வன் குணபத்திர முனிவன் சிந்தைக்
குடிகொண்ட அப்பனறுங் கொண்டைவாழ்த்தி
மறுக்கொண் மயிலாப்பூர் வண்மைபாடி
வானவர்கள் போற்றிசெயும் வண்மைபாடி
திதிச் சங்கவெள்ளிமலே நிகராம் வைகை
நீதிவரை சுந்தரியே யாடிரூசல் 6

குணவழகி மிகவுடையீ ராடிரூசல்
கூந்தலிளங் கமுகுடையீ ராடிரூசல்
இணேபிரியா மகவுடையீ ராடிரூசல்
எழுதரிய வடிவுடையீ ராடிரூசல்
மணமலிதன் தீபை நறுங்கொண்டை குன்றை
மகளந்தை தென்பறம்பை மயிலேவைகை
பண்குலவுந் திருநாடும் பாரும்போற்றப்
பதுமைவர சுந்தரியே யாடிரூசல் 7

கையில் வளேயோலமிட ராடிரூசல்
கருணேவிழிதான் புரள வாடிரூசல்
பொய்யனேய யிடைதுவள வாடிரூசல்
புளகயிளமுலேயசைய வாடிரூசல்

செய்யமலர்மேல் நடந்த தேவராசர்
திருவறமும் திருநாடும் திகழவாழ்த்தி
வைகைமலே மீதுறைவீ ராடிரூசல்
வாய்த்த வரசுந்தரியே யாடிரூசல் 8

அறுசமயநெறி நாலெட்டறம்வளரும்
அருள்காஞ்சி கருவிருத்தி யவனிகாக்கும்
குறுமுனிவருடன்முனிவர் மூவர்காக்கும்
குறைவ நிழற்றிருப்பரித்திக் குன்றில்போற்றி
சிறுசுனேயில் நீர்விளங்க சோதிகாட்டும்
திருவறமும் திருநாடும் திகழவாழ்த்தி
மரகதமே வல்லியற வாடிரூசல்
வாய்த்தவர சுந்தரியே யாடிரூசல் 9

முத்துமணலே பரப்பி வயிரத்தூணில்
முழுவயிரவுத் திரத்தால் கொடுங்கை சேர்த்து
வைத்த பவழக்காலில் புருஷராக
மணிக்கயிற்ருல் மரகதப்பூண் தொட்டிலேற்றிப்
பத்துவகைப் பொன்மணியும் பணிலமுத்தும்
பதினறுசீர் வகைமணியும் பண்பாய்பூணச்
சித்தர்மதி முகத்தம்மை யாடிரூசல்
சிறந்த சித்தை மரகதமே யாடிரூசல். 10

ஊசல் முற்றும்